www.tamilarangam.net

Kay

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

# தூண்டில்



மரணித்துப் போன
மக்களின்
மண்டையோடுகளில்
தடியெடுத்த
தண்டற்காரர்கள்
தங்களுக்குச்
சிம்மாசனம்
செய்கிறார்கள்.

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR.19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சீனாவில் இன்று...

- அகிலன் -

இன்று சீனாவில் நடப்பது பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்துகளைக் கொண்டிருக்கின்றனர். ஆதிக்க நோக்கம் உடைய நாடுகளில் சோவியத் யூனியனைத் தவிர ஏனைய நாடுகள் சீன அரசை கண்டிக்கின்றன. ஏழை நாடுகளின் கருத்துகள் எடுபடுவதும் இல்லை, அவை சர்வதேச அரங்குக்குள் முக்கியமானதாகக் கருதப்படுவதும் இல்லை. எனவே இந்த ஏழைநாடுகள் மௌனமாக நடப்பதை அவதானிக்கின்றன.

இங்கு நாடுகளின் கருத்து எனக் குறிப்பிடப்படுவது அந்தந்த நாடுகளின் அரசுகளின் கருத்தையே. சோவியத் யூனியன் சீனாவில் நடைபெறும் கொலைகளைக் கண்டிக்காதது அதன் சந்தர்ப்பவாத தன்மையை காட்டுவதுடன், மனித உயிர்களுக்கும், ஜனநாயகத்திற்கும் அது கொடுக்கும் மதிப்பையும் வெளிக்காட்டியுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய அரசுகள்கடுமையான கண்டனத்தை சீன அரசுக்கெதிராகத் தெரிவித்தன. அத்துடன் ஆயுத விற்பனை இடைநிறுத்தல் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. இந்த ஏகாதிபத்திய அரசுகள்தான் மத்திய அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, பலஸ்தீனம், ஆசிய பிரதேசங்களில் வாழும் மக்களின் உயிர்கள் கொல்லப்படுவதற்கும், உடைமைகள் அழிக்கப்படுவதற்கும் காரணமாயுள்ளன. இப்படியான இந்த அரசுகள் இன்று சீன அரசைக் கண்டிப்பதற்கு எந்த ஒரு தார்மீக பலமும் இல்லை. இருப்பினும் உலகத்தின் உன்னதமான மனித வாழ்வினை, அமைதியை நேசிக்கும் ஒவ்வொரு மனிதனும் சீன அரசைக் கண்டிக்கவும், அதை எதிர்த்துப் போராடவும் தார்மீக பலமும், ஆற்றலும் கொண்டுள்ளான்.

இன்று சீனாவில் நடக்கும் படுகொலைகளைக் கண்டிப்பவர்கள் பலவிதமான கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். இதில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகள் கொண்டிருக்கும் கருத்துகள்ஒரே ஒரு நோக்கத்தையே கொண்டுள்ளன. அதாவது சீனாவில் தங்களது மூலதனத்தை அதிகரிப்பதன் மூலம் சுரண்டலுக்கான சூழலை உருவாக்க வேண்டும் என்பதே. எனினும் தங்களது 'பழைய நண்பனை' எல்லை மீறிப்போய் கண்டிக்க முனைந்ததிற்குக் காரணம், ருஷ்ய-சீன உறவுகள் புதுப்பிக்கப் படுவதற்கான முயற்சிகள் தென்படுவதே. இருப்பினும் இவர்கள் நம்பியிருக்

(தொடர்ச்சி 8 ஆம் பக்கத்தில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டாம் வருடம்

இம் மாதம் 29ஆம் திகதியுடன் இலங்கை–இந்திய ஒப்பந்தம் இரண்டு வருட நிறைவை அடைகிறது. சமாதான ஒப்பந்தம் என்று வலிந்து பெயர் சூட்டப்பட்ட இந்த ஒப்பந்தம் இதுவரை நிறைவேற்றியவை எவை?, இவ் வொப்பந்தத்தால் பலன் அடைந்தவர்கள் யார்? பாதிக்கப்பட்டவர்கள் யார்?, இலங்கைப் பிரச்சினையில் தற்போது இந்த ஒப்பந்தத்தின் பங்களிப்பு என்ன? என்ற கேள்விகளுக்கு இன்று இலங்கையில் நடைபெறும் சம்பவங்களே சான்றுகளாக இருக்கின்றன.

தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற இயக்கங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்து இலங்கையில் ஆதிக்கம் செலுத்த முயன்ற இந்திய அரசு அது சரிவாராது போல் தெரியவே இலங்கையரசுடன் இரு அரசுகளினதும் நலன்களுக்கேற்ப ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு அமைதிப்படை என்ற பெயரில் நேரடியாகவே இராணுவத்தை அனுப்பி தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

தமிழ் அரசியல்வாதிகளால் மக்கள் மனதில் வளர்க்கப்பட்ட 'இந்தியா உதவிக்கு வரும்' என்ற நம்பிக்கையானது உணவுப்பொதியுடன் வந்த இராணுவத்தை வரவேற்கச் செய்தது. அனைத்து இயக்கங்களும்கூட இந்த வரவேற்பில் பங்கெடுத்துக் கொண்டன. இதையே சாதகமாக்கி தமிழ் மக்களின் நலனில் அக்கறை உள்ளது போல், இடைக்கால அரசு ஒன்றை உருவாக்கி, தன் உதவியுடன் ஏற்படுத்தப்பட்ட இந்த நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க இந்திய அரசு திட்டம் போட்டது. ஆனால், இந்தியக் கவச வாகனங்களில் தங்கள் கொடிகளைக் கட்டிக் கொண்டும், தங்கள் முகாம்களுடன் இந்திய இராணுவ முகாம்களை அமைக்க அனுமதித்துக் கொண்டும், தங்கள் தலைவர் பங்குகொண்ட சுதுமலைக் கூட்டத்திற்கு இந்திய இராணுவப் பாதுகாப்பைப் பயன்படுத்தியும் இந்தியாவுடன் அனுசரணையாக இருந்த புலிகள் இடைக்காலநிர்வாகத்திலான பதவிகள், பேரங்களில் தகராறு ஏற்பட இந்திய இராணுவத்துடன் மோதலை ஆரம்பித்தார்கள். இந்திய இராணுவம் எமக்கு உதவியாகவே வந்துள்ளது என நம்பிக் கொண்டிருந்த மக்களின் ஆதரவைத்

www.tamilarangam.net



தம் பக்கம் திருப்பிக் கொள்வதற்காக திலீபன் உட்படப் பல போராளிகளைப் பலி கொடுத்தார்கள். இதன் பின் மக்களும் ஓரளவு எதிர்ப்பைக்காட்ட, இந்திய இராணுவம் தனது அமைதிப்படை முகமூடியைக் கிழித்துக்கொண்டு சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியது. இராணுவத்திற்கேயுரிய பாணியில் கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம், சித்திரவதைகள் என்று தனது அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டது.

புலிகளினால் ஏற்கெனவே பல போராளிகளைப் பலி கொடுத்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியவற்றுடன் ஈ.என்.டி.எல்.எவ்வும் இணைந்து இந்திய இராணுவமும், புலிகளும் மோதிக் கொள்ளும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமது பழிவாங்கல்களைச் செய்வதற்கு வசதியாக இந்திய இராணுவத்துடன் கூட்டு வைத்துக்கொண்டு இயங்கவாரம்பித்தன. இந்திய இராணுவத்தின் உதவியுடன் புலி உறுப்பினர்களையும், அவர்களின் ஆதரவாளர்களையும் கொலை செய்து வருகின்றனர்.

புலிகளினால் இடைக்கால அரசு தடைப்பட்டபோதும், ஏனைய குழுக்கள் தன்னுடைய ஒத்துழைப்பை நாடுவதால் இந்திய அரசு அந்தக் குழுக்களைக் கொண்டே தனது ஆளுமைக்குட்பட்ட தமிழர்களின் நிர்வாக அமைப்பை உருவாக்க விரும்பியது. இதற்கமைய மாகாணசபைத் தேர்தல்களை ஒப்பந்தத்தில் உள்ளபடி இலங்கையரசு நடாத்தியபோது பலாத்காரமாக வாக்காளர்களைக் கொண்டு வந்தது முதல் இந்திய இராணுவத்தையே வாக்காளர்களாக மாற்றியதுவரை இந்திய அரசு பூரண ஒத்துழைப்பு நல்கியது. சுயேட்சையாகக்கூட வேறு யாரும் தேர்தலில்போட்டியிட்டுவிடக் கூடாதென்பதற்காக நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் இறுதி நேரம் வரை குறித்த தொகை பணத்திற்கு மேல் வைத்துக்கொண்டு நடமாடத் தடை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்திற்காகவே மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தினும் தனது வழக்கப்படி இலங்கையரசு உரியஅதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கு வழங்கவில்லை. இதையும் இந்திய அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நிதி உதவியிலிருந்து ஏனைய உதவிகள்வரை வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கு கொடுத்துதனது ஆளுமையை ஸ்திரப்படுத்திக் கொண்டது. "இலங்கையரசு எந்த அதிகாரங்களையும் வழங்காமல் ஏமாற்றி வருகிறது. இந்தியாவிடமிருந்தே நாம் உதவிகளைப் பெறுகிறோம்" என்று முதலமைச்சர் வரதராஜப்பெருமாளே உறுதிப்படுத்தியுள்ளார். எனவே வேறு எதையும் செய்து கொள்ள முடியாத மாகாண சபை 'மக்கள் தொண்டர் படை' என்ற பெயரில் இளைஞர்கள், மாணவர்களைப் பலவந்தமாகப் பிடித்து வந்து புலிகளுக்கெதிரான குழுவை அமைக்கப் பயிற்சியளித்து வருகிறது. இதைவிட "தற்போதைய புலிகள்—இலங்கையரசு பேச்சு வார்த்தைகளினால் மாகாணசபை

www.tamilarangam.net



கலைக்கப்பட்டால் (தான்) மறுபடியும் ஆயுதமேந்திப் போராடுவோம். தமிழீழத்தைப் பிரகடனம் செய்வோம். தென்னிலங்கை முற்போக்குச்சக்திகளுடன் இணைந்து போராடுவோம்" என ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் செயலாளர் நாயகம் பத்மநாபா சென்னையிலிருந்து வெளியிட்ட அறிக்கை மூலம் தங்களையே அம்பலப்படுத்தியுள்ளார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி வடக்கு, கிழக்கு இணைப்புக்கான பொதுசன வாக்கெடுப்பை நடாத்த வேண்டியிருப்பதால் இலங்கையரசு அதற்கான நடவடிக்கைகளில் ஏற்கெனவே இறங்கிவிட்டது. இதன் ஒரு பகுதியாக சம்மாந்துறையில் முஸ்லீம்-தமிழர்களுக்கிடையில் மோதலை ஆரம்பித்து வைத்தது. இந்தக் கலவரங்களினால் முஸ்லீம்களிலும், தமிழர்களிலும் பலர் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாகியுள்ளனர். இரு பகுதியினருக்குமிடையில் பரஸ்பரம் நம்பிக்கையீனமும், சந்தேகமும் தோன்றியுள்ளன. இலங்கையரசின் அடுத்த நடவடிக்கையாக முஸ்லீம்களுக்குப் பாதுகாப்புத் தேவை என்ற பெயரில் இலங்கை அதிரடிப்படையினரை அப் பகுதிகளுக்கு அனுப்பப் போகிறது.

இதைவிட இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் தமிழ்ப் பகுதிகளில் மூடப்பட்ட இலங்கை அதிரடிப்படை முகாம்களை அரசு மறுபடி புனருத்தாரணத்துடன் விஸ்தரிப்புச் செய்து வருகிறது. கடற் பகுதிகளில் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் சுடுகொலை செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

வெலிஓயா உட்பட பல இடங்களில் சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. இதைப் பத்திரிகைகளில் கண்டிப்பதுடன் இயக்கங்களின் செயற்பாடுகள் முடிவடைந்து விடுகின்றன. ஒப்பந்தத்தைச் செய்த இந்திய அரசு இதை எந்த விதத்திலும் கண்டு கொள்ளவில்லை.

மலையகத்தை கூட இலங்கையரசு இந்த இரண்டுவருடகாலப் பகுதியில் விட்டு வைக்கவில்லை. தமது கூட்டாளியான தொண்டமானிற்குஎதிரான புரட்சிகர சக்திகள் வளர்வதையறிந்து அவற்றை ஒடுக்குவதற்காக மலையகமெங்கும் அதிரடிப்படை முகாம்களை பரவலாக அமைத்துள்ளது. அத்துடன் தற்போது ஊர்க்காவல் படைகளையும் அமைத்து வருகிறது. இந்தப்படைகள் மலையகத் தொழிலாளர்களை தாக்கி வருவதுடன், திட்டமிட்டு நடாத்தப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றத்திற்கும் பாதுகாப்பளித்து வருகிறது. மலையக மக்களை ஐதாக்கி அவர்களது போராட்டத்தைப்பலவீனப்படுத்த இலங்கையரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க ஆரம்பித்து விட்டது. பிரஜாவுரிமையைக் கொடுக்காமல் உறிஞ்சிப் பிழிந்த தொழிலாளர்களை இந்தியாவுக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

www.tamilarangam.net



பேரினவாதக் குழுவான ஜே.வி.பியும் இந்திய எதிர்ப்பில் தீவிரமாக இறங்கியுள்ளதிற்குப் பல காரணங்கள் உள்ளன. மக்களைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வதற்காக ஜே.வி.பி வைத்த கோரிக்கைகளை பிரேமதாச ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதாலும், மாணவர்கள், தொழிலாளர்கள், மற்றும் புரட்சிகர சக்திகளை கொலை செய்து வருவதாலும் தனிமைப்பட்டுப் போயிருக்கும் ஜே.வி.பி தற்போதுள்ள ஒரே ஒரு எதிர்ப்புச் சக்தியான இந்திய எதிர்ப்பில் இறங்கியுள்ளது. 'ஜனசவிய' என்ற பிரேமதாசவின் வறுமை ஒழிப்பு ஏமாற்றுத் திட்டம் ஏழை மக்களிடமிருந்த ஜே.வி.பி ஆதரவையும் கணிசமானளவு குறைத்துள்ளது. இதனால் மக்களிடமிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இந்திய எதிர்ப்பில் தீவிரமாக இறங்கியுள்ளது. இதையும் முடக்கிவிடவும், புலிகளுடனான பேச்சு வார்த்தைகள் சுமுகமாகத் தொடரவும் 'ஜூலை 29க்குள் இந்திய இராணுவம் வெளியேறிவிட வேண்டும்' என பிரேமதாச அறிவித்துள்ளார். இதைவிட ஜே.வி.பி ஒருபடி முன்னே போய் எந்தவித நீண்டகாலத் திட்டமும் இல்லாமல் இந்தியப் பொருள் பகிஷ்கரிப்பு, இந்தியச் சேவை பகிஷ்கரிப்பு என்று ஆரம்பித்து இப்போது இலங்கைப் பிரஜைகளல்லாதோர் இலங்கையைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என இனவாதத்தை கக்க ஆரம்பித்துள்ளது.

ஜே.வி.பியின் இந்த நடவடிக்கைகள் இலங்கையரசின் தற்போதைய நிலைக்கு ஓரளவு பலமாயிருப்பதுடன் இந்திய அரசிற்கும்சாதகமாகவேயுள்ளது. தெற்கில் உள்ள இந்தியப் பிரஜைகளுக்கு ஜே.வி.பியால் உயிராபத்து ஏற்படும் பட்சத்தில் அங்கே இராணுவத்தை அனுப்பும் நிலையை எதிர்பார்த்து இந்தியா காத்திருக்கிறது.

இந்திய இராணுவத்துடன் தற்செயலாக மோதலை ஆரம்பித்த புலிகள் அது வெற்றி, தோல்வியில்லாமல் தொடர்வதாலும், இந்தியஇராணுவத்துடன் கூட்டு வைத்துள்ள குழுக்கள் தம்மை எதிர்க்கக்கூடிய பலத்தைப் பெற்று வருவதாலும், அர்த்தமில்லாத கொலைகள், கொள்ளைகள், துன்பங்களால் மக்களும், போராளிகளும் குழம்பிப் போயிருப்பதாலும் இலங்கையரசுடன் கூட்டை ஏற்படுத்தியுள்ளனர். இலங்கையரசுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள், அரச நிர்வாகத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் என்று பலருக்கு மரணதண்டனை கொடுத்த புலிகள்முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையை அரசுடன் வெற்றிகரமாக முடித்து இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்துள்ளனர். இலங்கையரசின் செலவில் விடுதிகளில் தங்கியிருக்கும் புலிகளுக்கு இலங்கையரசே பாதுகாப்பளிப்பது குறிப்பிடத்தக்கது. அரசுடனான புலிகளின் பேச்சுவார்த்தை ஏனைய குழுக்களை தனிமைப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. பேச்சு வார்த்தைகளின் பின்னரே முள்ளிக்குளத்தில் 40 புளொட், ரெலா

www.tamilarangam.net



உறுப்பினர்கள் புலிகளால் கொல்லப்பட்டதும், இதன்போது இலங்கை அதிரடிப்படை முகாமிலிருந்து புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டதும் பத்திரிகைச் செய்திகளாகும். புளொட், ரெலா உறுப்பினர்கள் ஏற்கெனவே தமது சக போராளிகளில் பலரைக் கொன்றதும் அனைவரும் அறிந்ததே.

இலங்கை—இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களில் இலங்கை நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இவை. இவற்றில் நடந்து முடிந்த இயக்க மோதல்களுக்கும், நடைபெறப் போகும் மோதல்களுக்கும் இந்திய அரசும், அதன் உளவுப்படையுமே முக்கிய காரணிகளாயுள்ளன. இதுவரை குறிப்பிட்ட சம்பவங்களிலிருந்து இந்த ஒப்பந்தத்தை தங்களுக்குச் சாதகமாக ஒவ்வொருவரும் எப்படிப் பாவித்துக் கொள்கிறார்கள் என்றும், தங்கள் நலன்களை எப்படிப் பேணிக் கொள்கிறார்களென்றும், தங்கள் பலங்களை எப்படி அதிகரித்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். இவற்றில் முக்கியமானது என்னவெனில் இலங்கை, இந்திய அரசுகளோ, இயக்கங்களோ மக்களைப்பற்றி எள்ளளவேனும் சிந்திக்கவில்லையென்பதே. ஒவ்வொரு பகுதியினரினதும் சுய இலாபங்களுக்காக அப்பாவி மக்கள் தொடர்ந்து பலிகொடுக்கப்படுகிறார்கள். உடைமைகள் நாசமாக்கப்படுகின்றன. அடுத்த தலைமுறையினர் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே, அமைதி, சமாதானத்திற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம் என்று இவர்கள் அனைவருமே சொல்லிக் கொண்டாலும் இரத்தக் களரியைத் தொடரவே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்களின் வெளிவேசங்களையும், பசப்பு வார்த்தைகளையும் நம்பி திரும்பத் திரும்ப ஏமாற்றப்படாமலிருக்க, இவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து, இவர்களின் எதிர்ப் புரட்சிகர தன்மையை இனம்கண்டுகொள்ள வேண்டும். இடைக்காலம், தற்காலிகம் என்ற ஏமாற்றுகளுக்கு பலியாகாமல் உன்னதமான வாழ்விற்கான, உண்மையான விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்காக முற்போக்குப், புரட்சிகர சக்திகள் ஒன்றிணைய வேண்டும். மக்களை சரியான வழியில் அரசியல் மயப்படுத்த வேண்டும்.

இந்திய இராணுவத்தை வெளியேறு என்று அறிக்கைகளை வெளியிடுவதாலோ, இந்திய இராணுவத்தை வெளியேற்றி விடுவதால்மட்டுமேயோ இந்திய ஆதிக்கத்திலிருந்து இலங்கையை விடுவித்துக் கொள்ள முடியாது. பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், இலங்கை என்று தென்னாசியப் பிராந்தியத்தையே தனது நாட்டாண்மைக்குக் கீழ் கொண்டுவர முனையும் இந்திய அரசை முழுமையாக முறியடிக்க வேண்டுமாயின், இந்தியாவிலுள்ள புரட்சிகர சக்திகளின் உதவியும் அவசியம் என்பதைப் புறக்கணிக்க முடியாது.

www.tamilarangam.net



(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்ற
கும் சாலோசியாங் சீனவின், ஆளும் கும்பலால் நசுக்கப்படுவாராயின் இவர்கள் டெங்சியாவோவினுடைய தலைமையிலான ஆளும் குழுவை ஆதரிப்பார்கள் என்பதும் வெளிப்படை.

எந்தவித லாப நோக்கமும் இல்லாமல், உன்னதமான மனித வாழ்க்கைக்கு எதிரானது இந்த அடக்குமுறை என்பதற்காக கண்டிப்பவர்களும் கூட, நடைபெறும் போராட்டம் பற்றிய பலவிதமான பார்வைகளையே கொண்டிருக்கிறார்கள். இந்தப் பார்வைகளில் குறிப்பாக, 'கொம்யூனிசம் கூடாது', 'கொம்யூனிசத்திற்கு எதிரானது' என்பதனால் இந்தப் போராட்டம் சிறந்தது என்பவர்களும், "சீனவில் கொம்யூனிசம் உள்ளது, அதற்கு எதிரானது என்பதால் இது தவறான போராட்டம்" என்பவர்களும் "சீனவில் கொம்யூனிசம் இல்லை, இருப்பினும் இது அப்பட்டமான முதலாளித்துவ மீட்சிக்கான போராட்டமாக உள்ளதால் பிற்போக்கானது" என்பவர்களும் முக்கியமாக அவதானிக்க வேண்டிய கருத்துகளைக் கூறுகின்றனர்.

"வரலாறு கண்ட யுத்தங்கள் யாவும் வர்க்கங்களுக்கு இடையிலானவையே" என்ற மாக்சின் கருத்தை வறட்டுத்தனமாகப் பிரயோகிப்பவர்கள் இந்தப் போராட்டத்தை முதலாளித்துவ வர்க்கம் நடத்துவதாகவும் கூறுகின்றனர். வரலாறு கண்ட யுத்தங்கள் யாவும் வர்க்கங்களுக்கு இடையிலானவையோ இல்லையோ ஆனல் நிச்சயமாக ஒடுக்கப்படும் மக்களுக்கும், ஒடுக்குமுறையாளருக்கும் இடையிலான யுத்தமே. அந்த அடிப்படையில் இன்று சீனவில் நடப்பது ஒடுக்குமுறையாளருக்கும் , ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையிலான யுத்தமே. இதற்குள் இருக்கும் சரியான அம்சங்களை நாம் ஏற்க வேண்டும். தவறான அம்சங்களை நிராகரிக்க வேண்டும்.

சரியான, தவறான அம்சங்களைக் கண்டுபிடிப்பதற்கு நாம் இன்றைய சீனவை அறிவதும், இன்று சீனவில் நடப்பதை அறிவதும் அவசியமாகும். இன்று சீனவில் நடப்பவை பற்றி உலக மக்களுக்குக் கிடைக்கும் செய்திகள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகளினது செய்திகளே. அவற்றிலிருந்து உண்மைகளைக் கண்டுபிடிப்பது மிகக் கடினமானது. ஆயினும் இரண்டு உண்மைகள் வெளிப்படை. ஒன்று, மக்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகிறார்கள். இரண்டாவது அரசு கொடூரமாக ஒடுக்குகிறது. மேலதிகமாக மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் சொல்வதுபோல் சீன மக்கள் அமெரிக்க ஜனநாயகத்தைக் கோருகிறார்கள், கொம்யூனிசத்தை எதிர்க்கிறார்கள், கலாச்சாரப் புரட்சியை எதிர்க்கிறார்கள் என்பது எல்லாம் தங்களுக்குச் சாதகமாகச் சொல்லும் கருத்துகளே.

உன்னதமான மனித வாழ்வை நேசிக்கும் மக்கள் கூட இந்த ஏகாதிபத்தியங்கள் தரும் செய்திகளிலிருந்தே தங்களது கருத்துகளைத் தொகுப்பதால் பல தவறான முடிவுகளுக்கு வருகிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பினும் ஒன்றை ஊகிக்க முடியும். அரசு, கட்சி ஆகியவற்றின் ஒடுக்குமுறைக்கு எதிராக நடைபெறும் சீன மக்களின் இந்தப் போராட்டமானது அமெரிக்க ஜனநாயகத்திற்கான போராட்டமே என விளம்பரப்படுத்தப்படுவதுடன், அதற்காதரவான போக்குத்தான் தலைமையான போக்காக இருக்கிறதா? என்ற சந்தேகமும் உண்டு. மாணவர்களின் அடிப்படைக் கோரிக்கைகளாவன:

1. அரசு, கட்சி ஊழியர்களுக்கான சலுகைகள் ரத்துச் செய்யப்பட வேண்டும்.
2. சமுதாய வாழ்வில் ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.

இவை இரண்டும் அவர்கள் கோரிக்கைகளில் முக்கியமானவை. இவை முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான கோரிக்கைகளாக மட்டும் இருக்க வேண்டியதில்லை. இவை கொம்யூனிசத்திற்கான கோரிக்கைகளாகவும் இருக்க முடியும். கொம்யூனிசத்தில் சமத்துவமும், ஜனநாயகமும் அடிப்படையானதே.

இன்று சீனாவில் நடைபெறும் போராட்டம் எதிர்காலத்தில் எப்படி வளர்ச்சியுறும் என்று அறிவதற்கு சீன சமுதாயத்தினை நீண்ட ஆய்விற்கு உட்படுத்த வேண்டும். சீன சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சியை அதன் அரசியல், கலாச்சார, வர்க்கப் போராட்டங்களை பொதுவாக கவனத்தில் எடுத்து இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அதே நேரம் குறிப்பாக சீனாவில் 1947இல் வெற்றி பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் பற்றியும், அதன்பின் அறுபதுகளின் பிற்பகுதியிலும், எழுபதுகளின் தொடக்கத்திலும் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சி பற்றியும், தோழர் மாவோக்குப் பின்னர் சீனத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யப்படும் ஆய்வு சீன சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மிகவும் பிரயோசனமாயிருக்கும்.

இதைவிடுத்து மேலோட்டமான பார்வைகளின் மூலம் இன்றைய போராட்டம் அப்பட்டமான முதலாளித்துவ மீட்சிக்கானதே என்று முடிவுகளைக் கூறுவதும், இந்தப் போராட்டத்தில் எந்த ஒரு முற்போக்கான கூறும் இல்லை என நிராகரிப்பதும் பிரயோசனமாக இருக்க முடியாது. இப்படியான பார்வைகளை சிலர் கொண்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம் அவர்கள் ஏற்கெனவே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய அட்டவணையை தயாரித்து வைத்திருப்பதுதான். அந்த அட்டவணையில் இருப்பதன்படியே சமுதாயம் வளர்ச்சியடைய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒவ்வொரு விதமான சமுதாயத்திலும் ஒவ்வொருவிதமான முரண்பாடுகள் முதன்மையான முரண்பாடுகளாக இருப்பதும், அதுவே தீர்க்கப்பட வேண்டியதாக இருப்பதால் தீர்க்கப்படுவதும், பின்பு சிறிய முரண்பாடுகளாக இருந்தவை வளர்ச்சியடைந்து முதன்மையாக வருவதும், அவை தீர்க்கப்படுவதும் ஓர் இயங்கியல் போக்கு. இந்த இயங்கியல் போக்கின் அடிப்படையிலேயே சீன சமுதாயத்தில் மாற்றம் ஏற்பட முடியும். சமுதாயங்கள் யாவும் வளர்ச்சியை நோக்கியே போய்க் கொண்டிருக்கின்றன. முரண்பாடுகள் தவறாக கையாளப்படும்போது பின்னோக்கி செல்லல் ஏற்பட்டாலும் சமுதாயத்தையும், ஒட்டுமொத்தமாக மனிதகுலத்தையும் பார்க்கும்போது வளர்ச்சியை நோக்கியே செல்கின்றன. இந்த அடிப்படையில் சீன மக்கள் சிறந்த ஓர் சமுதாயத்தைப் படைப்பார்கள்.

சீனாவில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய செய்திகளின் தொகுப்பு:

சிரேஷ்ட தலைவர் டெங் சியாவோ பிங்கின் வழிநடத்தலின் கீழான கொம்யூனிஸ்ட் கட்சிக்கு 7 வருட காலமாகத் தலைமை தாங்கியவர் குயாவோ பாங் என்பவர். இவர் தாராளவாத-சீர்திருத்தவாதியாகக் கருதப்படுபவர்.

1987 ஜனவரியில் கட்சித் தலைமைத்துவத்திலிருந்து விலகுமாறு குயாவோ பாங் கட்சிக்குள்ளிருந்த கடும் போக்காளர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

15.04.89இல் குயாவோ பாங் மாரடைப்பால் காலமானார்.

www.tamilarangam.net



இவரது மரணத்திற்கு அஞ்சலி செலுத்திய சீன மாணவர்கள் 18.04.89 இல் சீன அரசுக்கெதிரான கோசங்களுடன் ஆர்ப்பாட்டங்களைத் தொடங்கினர்.

மேலதிக ஜனநாயகம், சுதந்திரம் வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டங்கள் செய்த மாணவர்களுக்கு ஆதரவாக ஆயிரக் கணக்கில் வேறு மாணவர்களும் தியனமென் சதுக்கத்தில் கூடினர்.

மாணவர்கள் முதலாளித்துவத்தைக் கோருகிறார்கள், இவர்கள் எதிர்ப்புரட்சியாளர்கள் என்று சொல்லி சீன அரசு மாணவர்களின் போராட்டத்தை எதிர்த்துப் பின் அலட்சியம் செய்தது.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்கள் பின்னர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். சீன அரசு இதற்கும் பணியவில்லை. உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட பல மாணவர்கள் மோசமான நிலைகளில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர்..

இந் நேரத்தில் சீனாவில் பரவலாக தொழிலாளர்களும் மாணவர்களுக்கு ஆதரவாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். தொடர்ந்து ஏனைய பிரிவினரும் மாணவர்களுக்கு ஆதரவாக இணைந்துகொள்ளத் தொடங்கினர்.

இதன்பின் 01.06.89இல் சீன அரசு இராணுவத்தை தியனமென் சதுக்கத்திற்கு அனுப்பியது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சுற்றி வளைத்தஇராணுவம் எதுவித தாக்குதலிலும் ஈடுபடாது அமைதியாயிருந்தது.

"மக்கள் இராணுவம் மக்களைக் கொல்லாது" எனக் கோசமிட்ட மாணவர்கள் தங்கள் போராட்டத்தைப் பற்றி இராணுவத்தினருக்கும் பிரச்சாரம்செய்தார்கள்.

03.06.89இல் இராணுவம் பின்வாங்கப்பட்ட அதே நேரம் போராட்டத்தைக் கைவிடுமாறு டெங் இறுதி எச்சரிக்கையை விடுத்தார். எனினும் மாணவர்கள் கலையவில்லை.

04.06.89இல் கவச வாகனங்கள், பீரங்கிகள் சகிதம் திரும்பி வந்த இராணுவம் தியனமென் சதுக்கத்தில் குழுமியிருந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மிலேச்சத்தனமாகத் தாக்க ஆரம்பித்தது.

கவச வாகனங்களாலும், பீரங்கி வாகனங்களாலும் பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடில்லாமல் அனைவரும் நசித்துக் கொல்லப்பட்டனர். கண்மூடித்தனமாகப் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

4000 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருப்பதாகவும் 10,000பேருக்கு

www.tamilarangam.net



மேல் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் வெளியிடப்பட்டன.

இக்கொலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே இராணுவத்திற்குள் பிளவு ஏற்பட்டு சில இடங்களில் அவர்கள் தமக்குள் மோதிக் கொண்டார்கள்.

ஆயிரக்கணக்கான கொலைகளின் பின் குறுகிய காலத்தில் மாணவர்களின் போராட்டம் நசுக்கப்பட்டு, தியமென் சதுக்கம் விடுவிக்கப்பட்டது.

இராணுவத் தாக்குதலின் பின் போராட்டத்தில் பங்குபற்றியவர்கள்எனக் கருதப்பட்ட மாணவர்களும், ஏனையவர்களும் நாடு முழுவதிலும் பரவலாகக் கைது செய்யப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என நிருபிக்கப்பட்ட மூவருக்கு முதல்நாள் மரணதண்டனை விதிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டு குற்றம் செய்ததாக நிருபிக்கப்படுபவர்களுக்கு தொடர்ந்து மரண தண்டனை விதிக்கப்படுமென சீன அரசு கூறியுள்ளது. கைது செய்வது தொடர்கிறது. இதே நேரம் மாணவர்கள் நாட்டைவிட்டு தப்பியோடி மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி வருகின்றனர்.



## வாசகர் கடிதங்கள்

'எழுத்தும் சமூகமும்' என்ற தலைப்பிலான கருத்துகளில் பல வரவேற்கத்தக்க விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது நல்லவிடயம். மலையக மக்கள் பற்றிய விடயத்தினை கருத்திற்கெடுத்து வருவது நல்லது. ஏனெனில் அவர்கள் கூட தமிழ் பேசும் இனம் என்பது எம்மில் பலருக்கு ஞாபகம் இல்லை. 'கனவை மிதித்தவன்' நன்றாகவே தொடர்கிறது.

நோர்வே


தி. தயாநிதி

(தொடர்ச்சி 37 ஆம் பக்கத்தில்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நானும் ஒருவன் தம்பி

— கழலொலி தேவன் —

சாய்ந்து போன — அவனை
சா வந்து அணைத்ததென்று
சென்றுவிட்டன எதிரிப்படைகள்.

பாலஸ்தீனத் தெருவில்
ஒருநாள்
தாய் மண்ணைத் தனதாக்க
புனிதச் சமர் புரிகின்ற
மனிதனொருவன்
பிறந்த மண்ணை
சிவப்பாக்கி வீழ்ந்திருப்பான்.

வான் இடிந்து
விழுகின்ற வெடிகளுக்கு — அவன்
முகம் கொடுத்தான் — எதிர்முனையில்
உமிழ்கின்ற பீரங்கிக்கு
பதில் கொடுத்தான்.

சாய்ந்துபோன
அவனைச் சாவந்து அணைத்ததென்று
சென்றுவிட்டன எதிரிப்படைகள்.

நீரோட்டம் போலங்கு
குருதியோடிய பின்னும்
நினைவோட்டத்தில் — இன்னும்
தாய் மண்ணே நிறைந்திருக்கும்.

கரமிரண்டும் தாய் மண்ணை
இறுகப் பிடித்து
இறுதி மூச்சை விடவென்று
காத்திருக்கும்.

அப்போது இவன் மீது
கரமொன்று வந்து
தொடுகிறது.

எஞ்சிய உயிர் தன்னை
எமனுலகு அனுப்பவென்று
— மற்றுமோர்
எதிரிதான்
வந்துள்ளான் என
நினைத்திட்டான் நம்வீரன்.

வந்தவனோ நியாயத்தின்
உயிர் தன்னை
நிலைத்திருக்கச் செய்யவின்று
நல்வாய்ப்பொன்று
கிடைத்ததென்று
குற்றுயிராய் கிடந்த
அவனைத் தன் தோள்களிலே
சுமந்து கொண்டான்.

தோள்களின் சூட்டினாலும்
நேயத்தின் உரசலாலும்
நினைவு திரும்பி — நம்
வீரன் வினவத் தொடங்கினான்.

யார் நீ? — நீ ஒரு
பாலஸ்தீனச் சகோதரனா?

இல்லை நான்
ஒரு பலஸ்தீனன் அல்லன்.

அவ்வாறாயின் நீ
ஓர் இஸ்லாமியனாய்
இருக்க வேண்டும்.

www.tamilarangam.net



அதுவுமின்றேல் நீ
எங்கள் அரேபியனாய்தான்
இருத்தல் வேண்டும்.

இல்லைத் தோழனே
இல்லை.
என்னை அடையாளம்
காட்ட
உனக்கியைந்த
சொல்லொன்றும்
எனக்கில்லை ஆயினும்

நான் ஒரு மானிடன்
என் தந்தையோர்
இஸ்ரவேலியன் — என்
தாயும் அதுபோலவே

ஆயினும் நான்
ஒரு மானிடன்.

அவ்வாறயின் உன் தந்தையைப் போல்
தந்தையின் முதாதையைப் போல்
நீயும் எனைக் கொல்லாது
சுமப்பதேன்?

நானும் ஒருவன் தம்பி.
மதத்திற்கும் நிலத்திற்கும்
அப்பால்
மானுடம் பூத்ததில்
நானும் ஒருவன் தம்பி.

நன்றி:
நானும் ஒருவன் தம்பி — தென்றல்
வாழ்க்கை இலக்கியம் — புதிய சமுக எழுத்துகள்

பின்அட்டையில் பிரசுரமாயுள்ள கவிதையைப் படைத்த கவிஞர் பற்றி—


ஆஸ்திரியாவை நாசிகள் கைப்பற்றியபின் அங்கிருக்க முடியாது இங்கிலாந்திற்கு இடம்பெயர்ந்து, அந்தப் புகலிடத்தில் தன் மொழிக்கு மேலும் இருப்புகள் சேர்த்த ஜேர்மன் மொழிக் கவிஞர் எறிக் பிறீட் (Erich Fried) (1921—1988). இவர் கவிதைகளும், சொல்லோவியங்களும் சிக்கனமானவை. ஆனல் ஒவ்வொரு சொல்லுள்ளும் ஆயிரம் உணர்ச்சிகள் படைக்கும் தீரக் கவிதைகள்.

— ந. சுசீந்திரன்

www.tamilarangam.net



# புதிய நாசிகள்




— பாரதி —

அடொல்ப் கிட்லரினால் தோற்றுவிக்கப்பட்ட நாஸிக் கொள்கைகள் இரண்டாம் உலகப் போரின் பின் தற்போது மீண்டும் தலைதூக்கியுள்ளன. இக் கொடுங்கோலன் ஆட்சி செய்த ஜேர்மனியிலேயே இதன் வளர்ச்சி அபரிமிதமாக உள்ளது எனினும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் புதிய நாஸி இயக்கம் வேகமாக வளர்ந்து வருகிறது. புதிய நாஸிகளின் இந்த வளர்ச்சிக்கு மேற்குலக நாடுகளின் சீரழிந்த முதலாளித்துவம் தான் உறுதுணையாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்கு ஜேர்மனியில் தற்போது அரசியல் கட்சிகளுக்கு நெருக்கடிகளை உண்டாக்கியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், அகதிகளின் தொடர்ச்சியான வருகை, அந்நியர்களின் வருகை, குடிபெயர்ந்த டொச் பரம்பரையினரின் வருகை போன்றவற்றை புதிய நாஸிகள் தங்களுக்குச் சாதகமாக்கி வேகமாக வளர்ந்து வருகிறார்கள். இவர்களின் பிரச்சாரங்கள் யாவும் மேற்கூறியவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. றிபூப்பப்ளிகானு, என்.பி.டி, டி.வி.யூ, எப்.ஏ.பி என புதிய நாஸிகள் பல குழுக்களாக இயங்கினாலும் இவர்களின் பிரதான கோசம் 'டொச் நாடு டொச்சுக்காரர்களுக்கே' என்பதாகவே உள்ளது. இதற்கேற்பவே இவர்கள் இங்குள்ள வெளிநாட்டவர்களுக்கெதிராகத் தீவிரப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தங்களது கொள்கைகளை மக்களிடம் பரப்புவதற்காக கவர்ச்சியான வழிமுறைகளை இவர்கள் கையாளுகிறார்கள். இங்குள்ள வெளிநாட்டவர்களுக்கு மட்டும் எதிராக இல்லாமல் மூன்றாம் உலக நாடுகளையும் வெள்ளையர் அல்லாதோரையும் கேலி செய்யும் சிறிய சுவரொட்டிகள், கேலிச் சித்திரங்களை பஸ் தரிப்புகள், பஸ் இருக்கைகள், புகையிரத நிலையங்கள், கடைகள் நிறைந்துள்ள இடம் போன்ற பிரதான இடங்களில் ஒட்டுகிறார்கள். பாலங்களிலும், பெரிய சுவர்களிலும் மையினால் பெரிதாக எழுதுகிறார்கள். கிட்லரின் உரைப் பகுதிகள் இடம்பெற்ற வீடியோ விளையாட்டுக்களை மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கிறார்கள். இந்த வீடியோ விளையாட்டுகளில் வெளிநாட்டவர்களை எப்படித் துன்புறுத்துவது என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இப் புதிய நாஸிக்கள் வெளிநாட்டவர்களைத் தாக்கிய சம்பவங்களும் மேற்கு ஜேர்மனி முழுவதும் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

www.tamilarangam.net



இரண்டு வருடங்களுக்கு முன்பு மேற்கு பேர்லினில் அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாமொன்று இப் புதிய நாஸிகளால் தீக்கிரையாக்கப்பட்டது. இதில் பலத்த எரிகாயமடைந்தவர்களில் வயது முதிர்ந்த தமிழ்ப் பெண்மணி ஒருவரும், தமிழ்ச் சிறுவன் ஒருவனும் அடங்குவர். இதே காலப் பகுதியில் நோத்றைன் வெஸ்ற்பாலிய மாநிலத்தில் முழுவதும் தமிழ் அகதிகளே குடியிருந்த கட்டிடம் ஒன்று நடு இரவில் புதிய நாஸிகளால் தாக்கப்பட்டு கதவுகள், ஜன்னல்கள் நொருக்கப்பட்டன. இச் சம்பவத்தின்போது பொலிசாரால் 'பிடித்துச்' செல்லப்பட்ட நாஸிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டதையடுத்து அதே இரவில் அதே கட்டிடத்தை மறுபடி அவர்கள் தாக்கினார்கள்.

இதே மாநிலத்தின் வேறொரு நகரத்தில் தமிழர்கள் குடியிருந்த கட்டிடத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவர்களின் வாகனங்களுக்கு புதிய நாஸிகள் தீ வைத்தனர். தக்க தருணத்தில் பாதசாரிகள் இதை அவதானித்து தீயணைப்பு நிலையத்திற்கு அறிவித்தல் கொடுத்திருக்காவிடின் கட்டிடத்திலும் தீப்பிடித்திருக்கும். கெசன் மாநிலத்திலும் அகதிகள் குடியிருந்த கட்டிடத்திற்குள் நாஸிகள் புகுந்து அங்கிருந்தவர்களைத் தாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் நான்கு இந்தியர்கள் படுகாயமடைந்தனர்.

தமிழர்கள்தான் புதிய நாஸிகளின் பிரதான எதிரிகள் என்றில்லாவிடினும் மேற்கு ஜேர்மனியிலிருக்கும் அகதிகளில் கறுப்பு நிறத்தவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பதினால் இவர்களை அடையாளம் கண்டு தாக்குவது நாஸிகளுக்குச் சுலபமாயிருக்கிறது. இவர்களுடைய நிற வெறியும் இதற்குக் காரணம்.



1.

www.tamilarangam.net



அனைத்து நாஸிக் குழுக்களினாலும் முக்கிய எதிரிகளாகக் கணிக்கப்படும் வெளிநாட்டவர்கள் துருக்கி நாட்டவரே.இரண்டாம் உலகப் போரின் பின் சிதைந்துபோன மேற்கு ஜேர்மனியைப் புனரமைப்பதற்கு ஆட்கள் தேவைப்பட்டதால் துருக்கி நாட்டவர்கள் வரவேற்கப்பட்டார்கள்.இப்படி வந்து இங்கு குடியேறியவர்களின் சந்ததிகள் இங்கேயே பரவலாகி ஜேர்மனியர்களுடன் கலந்து வாழ்வதைப் பொறுக்க முடியாத நாஸிகள் 'துருக்கியரால் எமது நாடு பறிபோகிறது' என்றும், 'துருக்கியரின் கலாச்சாரம் எங்கள் நாட்டில் பரப்பப்படுகிறது' என்றும் 'துருக்கியராலேயே எங்களுடைய இளைஞர்களின் வேலைகள் பறிபோகின்றன' என்றும் பிரச்சாரம் செய்து தங்கள் காழ்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள்.அத்துடன் நாஸிகளால் துருக்கி நாட்டவர் கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.




2.




3.

சென்ற வருடம் நீடசக்ஸன் மாநிலத்தில் துருக்கி நாட்டவரின் உணவு விடுதியொன்றிற்குள் சுமார் 90பேர் அடங்கிய புதிய நாஸிக் கும்பலொன்று புகுந்து அங்கிருந்தவர்களைத் தாக்கியதுடன் உடைமைகளையும் சேதமாக்கியது.இத் தகவலைக் கேள்விப்பட்ட துருக்கி இளைஞர்கள் சுமார் 150 பேரளவில் இணைந்து சம்பவம் நடந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து நாஸிகளை எதிர்த்துத் தாக்கினர்.இம் மோதல் பற்றிய தகவல் கிடைத்து பொலிசார் உடனே வந்தபோதும் மூன்று மணித்தியாலங்களின் பின்பே அவர்களால் நிலைமையைக் கட்டுப்படுத்த முயன்றது.இச் சம்பவம் தொடர்பாக துருக்கி நாட்டவரே கைது செய்யப்பட்டார்கள்.

கிட்லரின் நூறாவது நினைவுநாளையொட்டி அண்மையில் கம்பேர்க் மாநிலத்தில் வெளிநாட்டவர்களை விரட்டியடிக்கப் போவதாக புதிய நாஸிகள் பாடசாலைகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.இதனால் குறிப்பிட்ட நாளன்று பாடசாலைகள் மாணவர்களின் வரவின்றி வெறிச்சோடிப் போயிருந்தன.நாஸிகள் தாக்கினால் அதை முறியடிப்

www.tamilarangam.net



பதற்காக ஆயுதங்களுடன் நடமாடிய துருக்கி நாட்டவரும், வேறு வெளி நாட்டவர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இறுதியாக சென்ற மாதம் மேற்கு பேர்லினில் பாதையில் வைத்து ஒரு துருக்கி மாணவன் புதிய நாஸிகளால் கொல்லப்பட்டார். இக் கொலையைக் கண்டித்தும், வெளிநாட்டவர்களுக்கெதிரான வெறுப்புணர்வைக் கண்டித்தும் சுமார் 4,000 ஜேர்மனியர்கள் ஊர்வலங்கள் நடாத்தினர்.

இப்படி மிலேச்சத்தனமாக தாக்குதல்களை ஒரு புறத்தில் நடத்திக்கொண்டே இப் புதிய நாஸிகள் தேர்தலிலும் பங்கு கொள்கிறார்கள். மேற்கு ஜேர்மனியின் முதலாளித்துவ அரசியற் சட்டங்கள் நாஸிகளையும் அரசியற் கட்சிகளாக ஏற்றுக் கொண்டுள்ளதுடன், அனைத்து நாஸிக் குழுக்களையும் தடைசெய்ய வேண்டுமென்ற பொதுமக்களினதும், சமூகசேவை ஸ்தாபனங்களினதும், இடதுசாரி அரசியற் கட்சிகளினதும் கோரிக்கைகளை நிராகரித்துள்ளன. அத்துடன் டி.வி.யூ என்ற நாஸிக் குழுவின் தேர்தல் பிரச்சார வெளியீடுகளை தபாற்சேவைத் திணைக்களமே அனைத்து வீடுகளுக்கும் விநியோகம் செய்தது. இது குறித்து பலர் ஆத்திரம், கண்டனம் தெரிவித்திருந்தும் தபாற்சேவை திணைக்களமோ, அரசாங்கமோ எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேற்கு பேர்லினிலும், கெசன் மாநிலத்திலும் நடந்து முடிந்த தேர்தல்களில் நாஸிகள் முறையே 11, 6 இடங்களைக் கைப்பற்றியுள்ளமை மனித நேயத்தில் அக்கறையுள்ள பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 'வெளிநாட்டவரைத் துரத்துவோம்', என்ற கோசத்தையே நாஸிகள் தேர்தல் பிரச்சாரத்தில் முன்வைத்து வெற்றி கண்டது இக்கருத்துக்கு எவ்வளவு ஆதரவு உள்ளது என்பதைக் காட்டியுள்ளது. புதிய நாஸிகளின் தேர்தல் பிரச்சாரங்களைத் தடுத்து நிறுத்த பொதுமக்கள் பலர் செய்த அனைத்து முயற்சிகளும் பொலிசாரினாலும், விசேட பொலிஸ் கொமாண்டோக்களினாலும் தடுத்து நிறுத்தப்பட்டு நாஸிகளுக்குப் பூரண பாதுகாப்பளிக்கப்பட்டது. அத்துடன் நாஸிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள்மேல் தடியடிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. தபாற் சேவைத் திணைக்களம் நாஸிகளின் பிரச்சார வெளியீடுகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்தமையும், நாஸிகளுக்கு எதிர்புத் தெரிவித்த பொதுமக்கள் பொலிசாரால் தாக்கப்பட்டமையும், நாஸிகளுக்கு பொலிசாரே பாதுகாப்பளித்தமையும் நாஸிகளுக்கு முதலாளித்துவ அரசாங்கம் எப்படி ஊக்கமளித்து வருகிறது என்பதைக் காட்டுகிறது.

(தொடர்ச்சி 27 ஆம் பக்கத்தில்)

www.tamilarangam.net






01.06.89 (வீரகேசரி)

கிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கை அதிரடிப்படை முகாம்கள் மீண்டும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஆரையம்பதி கொத்தணிப் பாடசாலைகளின் அதிபரும், பிரஜைகள் குழுவின் தலைவருமான இ.கணபதிப்பிள்ளை படுகொலை செய்யப்பட்டதையடுத்து 9 பாடசாலைகள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

மாத்தறைப் பகுதியில் சகோதரர்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

03.06.89 (வீரகேசரி)

"அப்பாவி மக்களைச் சுட்டுக்கொல்லும் இந்தியப்படை எமக்கு வேண்டாம்", "இந்தியப்படையைத் திருப்பியனுப்பு" போன்ற சுலோகங்களுடன் மருதானையில் முஸ்லீம்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். இந்த ஊர்வலத்தின் மீது கண்ணீர்ப்புகை, கற்களினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

"கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட கட்டுமுறிவு, புருணை, மாங்கேணி கதிரவெளி, கள்ளிச்சை, வடமுனை, மகாஓயா, பலாவெளி ஆகிய இடங்களில் சிங்களக் குடியேற்றங்கள்நடப்பதாக அறிகிறோம்" - மட்டு மாவட்ட எம்.பி

கைது செய்யப்பட்ட மாணவனைவிடுதலை செய்யக் கோரி கண்டி மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கல்முனையில் கடத்திச் செல்லப்பட்ட இருவர் பின்னர் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் தம்பிலுவிலைச் சேர்ந்த கண்ணமுத்து ராஜேந்திரம் என அடையாளம் காணப்பட்டது.

மாலிபொட தோட்டத்திற்குரிய அம்புலன்ஸ் வண்டி ஹெரணியகல நகரிலிருந்து தோட்டச் சின்னதுரைக்கு காய்கறி ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே போன்று உடப்பொல தோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய லொறி தோட்ட உத்தியோகத்தர்களின் குடும்பத்தினரின் சொந்த தேவைக்கே உபயோகிக்கப்படுகிறது.

தொண்டமானாறு பிரஜைகள் குழு உறுப்பினர் விஜயகுமார் கடத்திச் செல்லப்பட்டபின் இவரது சடலம்காக்கைத்தீவில் கண்டெடுக்கப்பட்டது.

விசாரணைக்கென கைது செய்யப்பட்ட ஏழாலையைச் சேர்ந்த சுஜேந்திரன், திருநெல்வேலியைச் சேர்ந்த ஆனந்தராஜா ஆகிய இருமாணவர்களும் சூட்டுக் காயங்களுடன்சடலமாகக் கண்டெடுக்கப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கருணாகரன் கொல்லப்பட்டார்.

www.tamilarangam.net



இந்திய இராணுவத்தால் கைதுசெய்து விடுவிக்கப்பட்டபின் அடிக்கடி இரத்த வாந்தியெடுத்த மகேஸ்வரன்என்பவர் தற்கொலை செய்துகொண்டார்.

04.06.89 (வீரகேசரி)

அப்புத்தளை கொஸ்லாந்தை வீதியில் அறைகுறையாக சிதைந்தநிலையில் 8 இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

05.06.89 (வீரகேசரி)

மூதூர் பாடசாலை அதிபர் சண்முகம் என்பவரின் சடலம் நிலாவெளியில் கண்டெடுக்கப்பட்டது.

இந்தியத் தூதரக குண்டு வீச்சுக்கு நாமே பொறுப்பு என 'தூநல் இஸ்லாம் விடுதலை அமைப்பு'உரிமை கோரியுள்ளது.

06.06.89 (வீரகேசரி)

மானிப்பாய் வீதியிலிருந்து நவாலி வரையிலான இந்திய இராணுவத்தின்தேடுதல் வேட்டையின்போதுடேவிட் வீதியைச் சேர்ந்த ஆர்.ரி. அன்ரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ் மாமுனைக் கடற்கரைப்பகுதியில் இந்திய இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான மோதலில் நாகராசா என்ற குடும்பஸ்தர்கொல்லப்பட்டார். பல வீடுகளும், பல இலட்ச ரூபா பெறுமதியான படகுகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன சேதமாக்கப்பட்டன.

மட்டுவில் முன்குள் தபால் சேவகர் சின்னத்துரை இனந்தெரியாதோரால்கொல்லப்பட்டார்.

07.06.89 (வீரகேசரி)

பாணந்துறையில் ஒரே இரவில்நால்வர் கொல்லப்பட்டனர்.

யாழ் புத்தூரை அண்டிய வாதரவத்தை ,கண்டிக்காடு, கரநடிப்பகுதிகளில் இந்திய இராணுவத்தினருடனான மோதலின்போது புலிகள் தரப்பில் நேரு,குட்டி ஆகியோர்கொல்லப்பட்டனர். கண்டிக்காட்டுப்பகுதியில் யோகேந்திரன், தலையசிங்கம், பாலசிங்கம், துரைராஜசிங்கம், வைகுந்தராஜா, லட்சணகுமார், கந்தையா, சிவபாதம் ஆகிய பொதுமக்கள்சுட்டுக் கொல்லப்பட்டனர். 3வீடுகள் எரிக்கப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரிமாணவன் முரளிதரனின் கொலையைக்கண்டித்து மாணவர்கள் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவனான ஆனந்தராஜாவின் கொலைக்கு கண்டனம் தெரிவித்து யாழ் மாவட்டப்பாடசாலைகள் அனைத்தும் பகிஷ்கரிப்புச் செய்தன.

08.06.89 (வீரகேசரி)

இந்தியப்படை வெளியேற வேண்டும் என்று கோரி கொழும்பில் உள்ள பத்திற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஆர்பாட்டம் செய்தனர். இவர்கள் மீது பொலிசார் தடியடிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

வத்தேகம வளவு வித்தியாலயமாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், விடுதலை செய்யக் கோரியும் மாத்தளை நகர்ப்

www.tamilarangam.net



புற பாடசாலைகளைப் பகிஷ்கரித்து ஆர்பாட்டத்தில் இறங்கினர். இதனையடுத்து பாடசாலைகள் மூடப்பட்டன.

கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை உட்பட நாட்டின் பல இடங்களிலும் ஏராளமான பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து ஆர்பாட்டம் செய்தனர். தெல்தெனியப் பாடசாலை மாணவர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு மாணவர்கொல்லப்பட்டார். 9பேர் காயமடைந்தனர்.

09.06.89 (திசை)

இந்தியப்படை ஜூலை இறுதிக்குள் வெளியேறிவிட வேண்டும் என்று ஜனாதிபதி பகிரங்கமாக விடுத்த வேண்டுகோளுக்கு, இந்திய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் இந்திய அமைதிப்படை இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படி தமக்களிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றிய பின்னரே இலங்கையிலிருந்து வெளியேறும், கலண்டரின்படி அல்ல என அறிவித்துள்ளார்.

காரைநகர் கடற்படைத்தளப்பகுதி விஸ்தரிக்கப்பட்டு, விமானத்தளம்ஒன்றும் அங்கு அமைக்கப்படவிருக்கின்றது. வட, கிழக்கில் புதிய இலங்கை இராணுவப் பிரிவை நிறுவ 200 கோடி ருபா ஒதுக்கப்பட்டிருப்பதோடு, கிழக்கில் முன்பு அட்டகாசம்செய்து நாசம் விளைவித்த அதிரடிப்படை முகாம்களும் விஸ்தரிக்கப்பட்டு வருவதோடு, புதிய முகாம்களும் நிறுவப்படவுள்ளன.

10.06.89 (வீரகேசரி)

"இந்திய அமைதி காக்கும்படைவிலக்கிக் கொள்ளப்பட்டபின் வடக்கு, கிழக்கு மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கைப்படையினரே ஈடுபடுத்தப்படுவர். நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள இராணுவத்தினரில் குறைப்புச் செய்து வடக்கு, கிழக்கில் உள்ள கேந்திர நிலையங்களில் அவர்களை கடமையில்ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம்." —வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்

12.06.89 (வீரகேசரி)

செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த திருஞானரதன், களுதாவளையைச்சேர்ந்த ரவீந்திரன், ராஜ், கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த ஒருவர்ஆகியோரின் சடலங்கள் வீதிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

13.06.89 (வீரகேசரி)

இந்தியப்படையை வெளியேற்றவேண்டாம் எனக் கோரி மட்டக்களப்பில் ஈழத் தமிழர் ஒன்றியத்தால் ஆர்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

நெடுந்தீவு—குறிகாட்டுவான் இயந்திரப் படகுச் சேவையில் பயணம்செய்யும் பயணிகள் இலங்கை கடற்படையினரால் அநாவசியமான முறையில் நடுக்கடலில் வைத்து சோதனையிடப்படுகின்றனர்.

14.06.89 (வீரகேசரி)

ஓமந்தையில் சிவம் என்பவரும், உக்குளா குளத்தில் செல்வச் சந்திரன் என்பவரும், கோமங்குளத்தில் நிக்கலஸ், யோசப் ஆகியோரும் இனந் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net



16.06.89 (வீரகேசரி)

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனை 6 இனந்தெரியாத இளைஞர்களின் சடலங்கள் வவுனியாவுக்கு அப்பாலுள்ள சின்னப்புதுக்குளம்பகுதியில் கண்டெடுக்கப்பட்டன.

தாண்டிக்குளத்தைச் சேர்ந்த மக்கள்தொண்டர் படையைச் சேர்ந்த ஜீவா சுட்டுக் கொல்லப்பட்டார். "விடுதலைப்புலிகள் எமது நண்பர்கள். நண்பர்கள் கோரிக்கைகளைமுன் வைக்க மாட்டார்கள். வேண்டுகோள்களையே விடுப்பார்கள்" – வெளிவிவகார, இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர்

22மணி நேரத்தில் நாடு முழுவதிலும் 7கொலைகள் இடம் பெற்றுள்ளன.

17.06.89 (வீரகேசரி)

சின்னப்புதுக்குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட 6 சடலங்களும் ஈரோஸ் உறுப்பினர்களுடையது என்று பாலகுமார் அடையாளம் காட்டினார். சாளம்பனைச் சேர்ந்த சிவபாலன், பெரியகுளத்தைச் சேர்ந்த குணபாலன், மகேஸ், முல்லைத்தீவைச்சேர்ந்த நாகரத்தினம், காத்தான்குளத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன், கல்முடுவைச் சேர்ந்த வன்னி ஆகியோரே கொல்லப்பட்டவர்கள். இந்திய இராணுவ அதிகாரிகளுடன் இவர்கள் பேசுவதற்கு அழைப்பப்பட்டாக்கள் எனப் பாலகுமார் தெரிவித்தார்.

18.06.89 (வீரகேசரி)

திருகோணமலையில் மக்கள் தொண்டர்படைக்கென மாணவர்களைக் கட்டாயப்படுத்திச் சேர்க்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது எனஈரோஸ் இந்தியாவிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

19.06.89 (வீரகேசரி)

தென்பகுதியில் தீவிரவாத இயக்கத்தினர் பிறப்பித்திருக்கும் இரவுநேர ஊரடங்கை மீறினோர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் காய்கறிகளை ஏற்றிவந்த லொறியொன்றும், பஸ் வண்டியொன்றும் கடலுக்குள் தள்ளிவிடப்பட்டன. இரவு 9மணிமுதல் அதிகாலை 4மணிவரை தீவிரவாத இயக்கமொன்று இப்பகுதியில் ஊரடங்கு சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்த கஜேந்திரன் என்ற மாணவன் மாங்குளத்தில் கொல்லப்பட்டார்.

மாத்தளையில் சாதிரில் என்ற 3பிள்ளைகளின் தந்தை சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சீவல் தொழிலுக்குச் செல்லக்கூடாது என்று பல தடவை எச்சரிக்கை விடப்பட்டிருந்தும் அதை மீறிச் சென்றதன் விளைவாகவே கொல்லப்பட்டார்.

20.06.89 (வீரகேசரி)

உடப்புசல்லாவ ஒல்டிமார் தோட்டத்தைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவரும், ஏம்மஸ்ட் தோட்டத்தைச்சேர்ந்த சௌந்தரராஜன் என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இக் கொலைகளைக் கண்டித்து தொழிலாளர் வேலைக்குச் செல்லவில்லை.

சாவகச்சேரியில் இடம்பெற்றகுண்டு வெடிப்பைத் தொடர்ந்து இராசரத்தினம் என்பவர் கொல்லப்பட்டார்.

www.tamilarangam.net



அச்சுவேலியில் விநாயகமூர்த்திஎன்ற ஆசிரியரும், அவரது மகனும், அயல்வீட்டுக்காரரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வடமாராட்சியில் இ.மகேந்திரராஜா என்ற மாணவர் இந்தியஇராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இயக்கச்சி முகாம் அருகேமோகன் என்பவரும், நெல்லியடியில் சிவசோதி, சுப்பிரமணியம் ஆகியோரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

21.06.89 (வீரகேசரி)

பஸ் டிப்போக்களில் அமைக்கப்படும் இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும், அரசியல் அடிப்படையிலன்றி தகைமைகளின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும், ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளமாக 2,500ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் 11.06.89இலிருந்து வேலை நிறுத்தம் செய்துவரும் இ.போ.ச ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்து புகையிரப்பகுதி ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்கின்றனர். கொழும்பு துறைமுக ஊழியர்களாலும் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

நாடெங்கும் மீண்டும் அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

"கடந்த சில நாட்களாக வடக்கு, கிழக்கில் ஆயுதக்குழுக்களினால் மாணவர்கள், இளைஞர்கள் கடத்தப்படுகின்றனர். அச்சுறுத்தல், பயமுறுத்தல் மூலம் ஆட்திரட்டப்படுவது அராஜகமானது." -பாலகுமார்

வேலை நிறுத்தம் செய்துவரும் இ.போ.ச ஊழியர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு வருவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இளம் பாடசாலை மாணவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்எவ், ரெலோ ஆகியவற்றால் பலவந்தமாக அவர்கள் வீடுகளிலிருந்துகொண்டு செல்லப்பட்டு அவர்களது பெற்றோரின் விருப்பங்களுக்கு மாறாக இந்திய அமைதிப்படையின் பயிற்சிக்குத் திரட்டப்படுகின்றனர் என விடுதலைப் புலிகள் குழுவினர் இலங்கையரசின்கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

22.06.89 (வீரகேசரி)

வவுனியாவில் மூவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனையடுத்து வவுனியா நகரிலும், நகரையொட்டிய பகுதிகளிலும் மாணவர் வரவின்மையால் பாடசாலைகள் இயங்கவில்லை.

புத்தளத்தில் உள்ள முஸ்லீம் கடையொன்றிற்கு வந்த சீருடையினர் ரகளையில் ஈடுபட்டு கடையைச் சேதமாக்கினர். கசீர் என்பவர் காயப்படுத்தப்பட்டார். துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இச் சம்பவத்தினால் புத்தளம் நகரில் நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் மூடப்பட்டன.

23.06.89 (வீரகேசரி)

யாழ்ப்பாணத்தில் சிறில் சுவாம்பிள்ளை என்பவர் இனந்தெரியாதநபர்களினால் அவரது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டார்.

வேலைநிறுத்தம் செய்துவரும் இ.போ.ச ஊழியர்கள் 23.06.89

www.tamilarangam.net



இற்குள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்றும், இல்லையேல் தாமாகவே வேலையிலிருந்து விலகியவர்களாககருதப்படுவர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை—இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபின் அமைதி வழிக்குத் திரும்பிய தமது உறுப்பினர்களில் 84பேர் சக இயக்கங்களாலும், இலங்கை, இந்திய இராணுவத்தினராலும் கொல்லப்பட்டுள்ளதாக ஈரோஸ் அறிவித்துள்ளது.

வவுனியா ஓமந்தையில் நடந்த புலிகள்—இந்தியப்படை, தொண்டர்படை மோதலில் 25 புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், மோதல் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொந்தக்காரன் குளத்தில் நடந்த மோதலில் சிவா, ராமகிருஷ்ணன், கார்த்திக், பூட்டோன், அரசன் ஆகிய 5 உறுப்பினர்களும், இன்னொரு மோதலில் சுதா, பீறு ஆகிய உறுப்பினர்களும் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

24.06.89 (வீரகேசரி)

தெல்லிப்பளைச் சந்தையிலிருந்து கே.சின்னராசா என்பவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார். பின்னர் அவரது சடலம் மாவிட்டபுரத்தில் கண்டெடுக்கப்பட்டது.

அவசரகாலச்சட்டம் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபின் இது வரை 60பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவசரகால விதிகளின்கீழ் கைதாவோரை விசாரணையில்லாமல் நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்க முடியும்.

வடக்கு, கிழக்கிலிருந்து இந்தியஅமைதிப்படை விலகுவது தொடர்பாக ஒரு உறுதியான கால அட்டவணை இணங்கப்படுகின்ற அதேவேளை விடுதலைப்புலிகளுக்கெதிரான ஆயுதநடவடிக்கைகளை இந்திய அமைதிப்படை நிறுத்தினால் நிச்சயமாக தமது யுத்த நிறுத்தத்தினை இந்திய அமைதிப்படைக்கும் நீடிப்பது குறித்து விடுதலைப் புலிகள் பரிசீலிப்பர் என ஜனாதிபதி செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

25.06.89 (வீரகேசரி)

மண்கும்பானைச் சேர்ந்த வை.கனகலிங்கம் என்பவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

நெடுங்கேணி கிராமிய வைத்தியசாலையில் கடமைபுரியும் டாக்டர் பரமகுரு கடத்தப்பட்டுள்ளதாகஅவரது மனைவி இந்தியப்படை முகாமில் முறையிட்டுள்ளார்.

வேலைநிறுத்தத்தை மீறி மாத்தறைப்பகுதியில் தனியார் பஸ்கள் சேவையீடுபட்டதைத் தொடர்ந்து மாத்தறை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒவ்வொரு மாகாணசபைகளுக்கும் உட்பட்ட இ.போ.ச டிப்போக்களில் பணியாற்றும் ஊழியர்களது விபரங்களை அவ்வப்பகுதி இராணுவஇணைப்பாளர்கள் சேகரித்து வருகின்றனர்.

வவுனியா—மன்னார் வீதியில் உள்ள15 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து பல குடும்பங்கள் நெற்சந்தைப்படுத்தும் சபைக் கட்டிடத்தில் தஞ்சமடைந்துள்ளன.

www.tamilarangam.net



26.06.89 (வீரகேசரி)

நெல்லியடியில் ஜோசப், சந்திரன், ஜோன்ஸன் என்ற ஈரோஸ் உறுப்பினர்கள் இனந்தெரியாதோரால்கடத்தப்பட்டுள்ளனர்.

கந்தரொடையில் ஆர்.கணேசகுமார் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கைதடியிலும், வளலாய் இடைக்காட்டிலும் பலர் விசாரணைக்கென இந்திய இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

நாகர்கோவிலில் முருகேசு, பத்திரராஜா என்ற இருவர் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஒரு இயக்கத்தை இன்னொரு இயக்கத்திற்கெதிராகத் தூண்டிவிட்டு இறுதியில் எல்லா இயக்கங்களையும், போராளிகளையும் அழிக்கும் பேரினவாதத்தின் சூழ்சிகளுக்கோ அல்லது ஆசியாவில் தேசிய விமோசன இயக்க, அணிசேரா இயக்கக் கோட்டையைத் தகர்த்து இந்துமகாசமுத்திரத்தில்தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏகாதிபத்தியம் பின்னும் சதிகளுக்கோ இரையாகாமல் அனைத்து இயக்கங்களும், போராளிகளும் விழிப்புடனிருக்க வேண்டுமென முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

27.06.89 (வீரகேசரி)

அத்தியாவசிய சேவையொன்றில்ஈடுபடும் அரச அதிகாரியை அவர்கடமையைச் செய்யாதிருக்க அல்லது ஏதாவது அரசியல் கட்சி அல்லது தொழிற்சங்கத்தின் உறுப்பினர் அல்லது பதவி வகிக்கும் எவரையும்அதிலிருந்து விலகுமாறு கோரும் எழுத்து அல்லது வாய்மொழி மூலம்மரணபயமேற்படுத்தும் எந்த ஒருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்படும் புதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

29.06.89 (வீரகேசரி)

தமிழீழ விடுதலைப்புலிகளும், இலங்கையரசாங்கமும் தமக்கிடையிலான பகைமைகளை முடிவுக்குக் கொண்டுவந்து பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க உடன்பட்டுள்ளனர். புலிகள் தமது யுத்த நிறுத்தத்தை இலங்கையரசாங்கத்திற்கெதிரான தமது பகைமை நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும் ஒன்றாக மாற்றிக் கொள்ள தீர்மானித்திருப்பதாகவும், தீர்க்கப்படாத அனைத்துப் பிரச்சினைகளையும் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள தீர்மானித்திருப்பதாகவும் எல்.ரி.ரி.ஈ சார்பில் அன்டன் பாலசிங்கம் அறிவித்திருக்கிறார். எல்.ரி.ரி.ஈயின் முடிவினை அரசாங்கம் வரவேற்றிருப்பதாகவும், இனிவரும் காலத்தில் அரசாங்கம் எல்.ரி.ரிஈக்கெதிரான எல்லாப் பகைமை நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவரும் என்றும்கமீத் அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்தார். பேச்சு வார்த்தைகள் தொடர்பாக பத்திரிகையாளர்கள் கைத்தொழில் அமைச்சரிடம் "தமிழீழக் கோரிக்கை கைவிடப்பட்டதா?" என்று கேட்டபோது "பேச்சுவார்த்தையில் தமிழீழக் கோரிக்கையை அவர்கள் வைக்கவில்லை"எனப் பதிலளிக்கப்பட்டது.

கொக்குவிலில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் குலேந்திரா, குகனேஸ்வரன் ஆகியோருடன் இன்னொருவரும் கொல்லப்பட்டார்.

www.tamilarangam.net



# இன்றைய நிலைமைகள்

-சமதா நிருபர்கள்-

எல்.ரி.ரி.ஈ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் என்ற தனித்தனிப்பெயர்கள் இனித் தேவையில்லை. எல்.ரி.ரி.ஈ-1, எல்.ரி.ரி.ஈ-2, எல்.ரி.ரி.ஈ-3 என்றே வைத்துவிடலாம். கடந்த இரண்டு மாதங்களுக்குள் மட்டும் 200பேருக்குமேல் கொல்லப்பட்டார்கள். 'முரசொலி' பத்திரிகை ஆசிரியரின் மகன் அகிலனைச் சுட்டுக் கொன்றது ஈ.பி.ஆர்.எல்.எவ்தான். (இக் கொலை பற்றிய விபரம் ஊண்டில் கலம் 18இல் வெளியாகியுள்ளது). இரண்டு வாரங்களுக்கு முன்பு ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் ஒருவரின் தந்தையை புலிகள் சுட்டுக்கொன்றனர். மறுதினம் நான்கு புலி உறுப்பினர்களின் தந்தையரை ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் சுட்டுக் கொன்றனர்*. இத்தகைய கொலைகள் ஒரு நச்சுவட்டம் மாதிரித் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

பத்திரிகைகளுக்கு யாழ்ப்பாணத்தில் எதுவித சுதந்திரமும் கிடையாது. யார்கொல்லப்பட்டாலும் இனந்தெரியாத நபர்கள் என்றே எழுதுகிறார்கள். உண்மைகளை எழுதப் போய் வெடிவாங்க யாரும் தாயாரில்லை. இந்திய இராணுவம் இலங்கையிலேயே இருக்க வேண்டும் என்பதற்கான கையெழுத்து வேட்டையை ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆயுதமுனையிலும், பலத்தாலும், நிர்ப்பந்தத்தாலும் நடத்துகிறது.

பிரச்சினை என்னவென்றால் இந்திய இராணுவத்தின் தந்திரம் தமிழ் மக்கள் பலமாக உள்ள இடங்களில் (யாழ், வவுனியா, முல்லைத்தீவு) தமிழ் மக்களைப் பலவீனப்படுத்துவதாகவும், தமிழ் மக்கள் பலவீனமாக உள்ள இடங்களில் (திருமலை) தமிழ் மக்களை ஆதரவு செய்வதாகவும் உள்ளது. இதனால்தான் வடக்கில் பயங்கரமான இந்திய இராணுவ எதிர்ப்பு உள்ளபோதும் திருமலையில் அவ்வாறில்லை. சிங்கள மக்களை அடித்துவிரட்ட பல சந்தர்ப்பங்களில் இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்கு ஒத்தாசையாக இருந்து வருகிறது.

மாகாணசபை பெரும்பாலும் பம்மாத்துதான். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி 'லன்சர்' காருக்கும், 'பேஜோ' ஜீப்புக்கும், ஏதர பாதுகாப்பு செலவுகளுக்குமே செலவழிக்கப்படுகிறது.

மிக மிக வயது குறைந்த புதியவர்களை புலிகள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு இன்னும் நீண்ட காலத்திற்குத் தாக்குப் பிடிக்கத் தயாராகிவருகிறார்கள்.

* இதே போன்று சில மாதங்களுக்கு முன்னர் ராமநாதபுரம் வட்டக்கச்சியில் விடுதலைப்புலிகளால் ரெலோ உறுப்பினரின் தந்தை கொல்லப்பட்டதைத்தொடர்ந்து ரெலோ உறுப்பினர்களால் புலி உறுப்பினரின் தந்தை கொல்லப்பட்டார்.

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைவிட இன்னொரு சம்பவமும் ஆளும் வர்க்கத்தை நன்றாக அம்பலப்படுத்தியுள்ளது. ஒன்றரை வருடங்களிற்கு முன்பு நீடாசக்ஸன் மாநிலத்தில் 15 வயதான ஜேர்மனிய மாணவன் ஒருவன் தனது சக பள்ளிநண்பர்களால் தடியால் அடித்துக் கொல்லப்பட்டான். கொலையாளிகளைக் கைதுசெய்த பொலிசார் விசாரித்ததில் தாங்கள் எப்.எ.பி என்ற நாஸிக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், தங்கள் குழுவிலிருந்து நண்பன் விலக முயற்சித்தமையினால் அவனைக் கொன்றுவிடும்படி தங்களுக்குக் கட்டளையிடப்பட்டதாகவும் தெரிவித்தார்கள். மேலும் விசாரித்ததில் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரே அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதாகவும், அவரே கொலை செய்யக் கட்டளையிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். பின்னர் இவர்கள் மனநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். இவர்களால் சொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பின்னர் தகவலே இல்லை.

தங்களுடைய கருத்துகளையே (வெளிநாட்டவர்களுக்கெதிரான காழ்ப்பு) நாஸிகளும் பிரச்சாரம் செய்வதால் பல அரசியல் கட்சிகளும் நாஸிகளைக் கண்டும் காணாதது போலிருக்கின்றன. எனினும் நாஸிகளைப் பகிரங்கமாக எதிர்த்துவரும் சக்திகளும் இல்லாமலில்லை. மேற்கு ஜேர்மனியிலிருக்கும் அகதிகளுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் ஆதரவு தெரிவிப்பதிலும், நாஸிகளுடன் மோதுவதிலும், சுவரொட்டி, பிரச்சாரம், வெளியீடுகள் மூலம் அவர்களை எதிர்த்து வருவதிலும், அரசாங்கத்தின் அராஜகப் போக்குகளை எதிர்ப்பதிலும், அவற்றை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவதிலும் ஆர்.எ.எப் என்ற சிவப்பு இராணுவ முன்னணி, ஆர்.சற் என்ற பெண்கள் இயக்கம், ஏ என்ற அனக்கிஸ்ற் இயக்கம், அன்ரிபா என்ற பாசிச எதிர்ப்பியக்கம் போன்றன முன்னணியில் உள்ளன. இவற்றில் முதலிரண்டு இயக்கங்களும் தலைமறைவு இயக்கங்களாகும். இவர்களின் போராட்டங்கள் அரசபடைகளினால் தீவிரமாக அடக்கப்படுகின்றன. பகிரங்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் இரகசியப் பொலிசாரினால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு பின்னர் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். இதற்கென 129 ஏ எனப்படும் கறுப்புச்சட்டம் ஆளும்வர்க்கத்தால் அமுல்படுத்தப்படுகிறது.




4.



5.

www.tamilarangam.net



அரசு, பொலிஸ், தபாற்துறை போலவே இங்குள்ள தொலைக்காட்சிச் சேவைகள் சிலவும், பத்திரிகைகள், சஞ்சிகைகள் சிலவும் புதிய நாஸிகளுக்கு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. இவை வெளிநாட்டவர்களில் சிலர் கூடிய வசதிகளோடு இங்கு வாழ்வதையும், வெளிநாட்டவர்களில் சிலர் செய்யும் குற்றங்களையும் அனைவருக்கும் பொதுவாகப் பெரிதுபடுத்தி வெளிநாட்டவர்களுக்கெதிரான எதிர்ப்பை வளர்க்க உதவுகின்றன.



6.

இப்படி நாஸிகளை ஆதரித்துக்கொண்டும், நாஸிகளை எதிர்ப்பவர்களை ஒடுக்கிக்கொண்டும் நாஸிகள் வளர்ந்து வருகிறார்களேயென்று ஆளும் வர்க்கம் முதலைக் கண்ணீர் வடிக்கின்றது. தங்களது சீரழிந்த முதலாளித்துவக் கொள்கையாலும், அபரிமித ஆயுத உற்பத்தி, விற்பனையினாலும் ஏற்பட்டு வரும் பிரச்சினைகளையும், வேலையில்லாத் திண்டாட்டங்களையும் சமாளிக்க முடியாமல், இவற்றினால் விரக்தியடைந்து தெருவுக்கு வரும் இளைஞர்களை வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு காரணம் வெளிநாட்டவர்களேயென்று காரணம் காட்டி அவர்களை நாஸிகளுடன் சேர ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த நிலைமைகளினால் வேகமாக வளர்ந்து வரும் புதிய நாஸிகளின் அராஜகம் அளவுக்கதிகமாகப் போகும்போது, தாமாகத் தங்களுடைய தாய்நாட்டுக்குத் திரும்பிப் போகாமல் மேற்கு ஜேர்மனியே நிரந்தரம் எனக் கற்பனை செய்து கொண்டிருக்கும் வெளிநாட்டவர்களும், அகதிகளும் விரைவில் தங்களுடைய நாடுகளுக்குப் பறந்துபோகப்போகிறார்கள். எனினும் இந்நாட்டின் அரச ஒடுக்குமுறைகளும், நாஸிகளின் பாசிசமும் தங்களுக்கெதிரான சக்திகளையும் வளர்த்துவிடுமென்பதால் பல புரட்சிச் சக்திகள் ஒன்றிணைந்து பலமுடன் பாசிசத்தையும், அராஜ

www.tamilarangam.net



கத்தையும் அடியோடு அழித்தொழித்து மனிதத்தை நிலைநாட்டப்போவது நடக்க முடியாத ஒன்றல்ல.

படங்களுக்கான விளக்கங்கள்


01. "அகதிகளை விரட்டு", "வெளிநாட்டவர்களை விரட்டு" என்ற கோசங்களுடன் ஊர்வலமாகச் செல்லும் 'ஸ்கின் கெட்' என்ற நாசிக்கும்பலை ஒரு பெண் ஆத்திரத்துடன் விரட்டியடிக்க முயற்சிக்கிறார்.

02. நாசிக் கும்பலில் ஒன்றான எப்.ஏ.பியின் வெளிநாட்டவர்களுக்கெதிரான சுவரொட்டிகளில் ஒன்று. மேற்கு ஜேர்மெனியில் இருக்கும் துருக்கியர் தமது பணத்தைச் சுருட்டிக் கொண்டு போவதாக சித்தரிக்கிறது.

03. நாசிக் கும்பலில் ஒன்றான என்.பி.டியின் வெளிநாட்டவர்களுக்கெதிரான இனத் துவேசத்தைக் கக்கும் சுவரொட்டிகளில் ஒன்று. ஜேர்மெனியப் பெண்கள் கறுப்பர்களை (வெள்ளையரல்லாதோரை) திருமணம் செய்வதோ, அவர்களுடன் பாலியல் தொடர்பு வைத்திருப்பதோ ஜேர்மன் இனத்தைப் படுகொலை செய்யும் செயலுக்கு ஒப்பானதாகும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

04,05. நாசிக்கும்பலுக்கும், அராஜகத்திற்கும், பாசிசத்திற்கும் எதிராகஇயங்கும் அன்ரிபா என்ற இயக்கத்தினரின் சுவரொட்டிகளில் இரண்டு. நாசிகளை முறியடிப்போம் எனக் குறிக்கிறது.

06. நாஸிகளின் சின்னமும், ஜேர்மன் அரசாங்கத்தின் சின்னமும் வரையப்பட்டுள்ளன. நாஸிகளும், ஜேர்மன் அரசும் நட்புறவைக் கொண்டிருப்பதைக்குறிக்கும் இப் படம் அராஜகத்திற்கும், பாசிசத்திற்கும் எதிரான இயக்கமொன்றினால் வெளியிடப்பட்டதாகும்.



www.tamilarangam.net



# இலக்கியச் சந்திப்பு

– ஜோசப் –

இலக்கியச் சந்திப்பின் நான்காவது தொடர் 10.05.89 இல் ஸ்ருட்காட் நகரில் நடைபெற்றது. இச் சந்திப்பில் சிந்தனை, புதுமை, வெகுஜனம், நமது குரல், தூண்டில், தேனி ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்களும், வாசகர்களும், இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்களுமாக சுமார் 80க்கும் அதிகமானோர் பங்குபற்றினர். வண்ணத்திப்பூச்சி, கலைவிளக்கு, ஏலையா சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் கலந்து கொள்ளவில்லை. வழக்கமாக இலக்கியச் சந்திப்பில் பங்குபற்றுபவர்களைவிட அதிகமான புதியவர்களையும் காணக்கூடியதாயிருந்தது.

இலங்கையில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்ந்து மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டபின் நிகழ்ச்சிகள் வரவேற்புரையுடன் ஆரம்பமாகின. இதனையடுத்து சுருக்கமான சுய அறிமுகத்தின் பின் வாசகர்கள் விமர்சனங்கள் ஆரம்பமாகின. இதன்போது இடம்பெற்ற சில விமர்சனங்கள்:

"ஏலையா 17வது இதழில் பேச்சுவார்த்தை என்ற ஆசிரயர் தலையங்கம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஏலையா இதழின் பின் அட்டையில் எந்த ஈழத்தரசியல் இயக்கத்திற்கும் சார்பானதாகவோ, எதிரானதாகவோ ஏலையா இல்லை எனக் குறிப்பிட்டுவிட்டு அதற்கு முரணாக எழுதுகிறார்கள். ஒரு இயக்கத்தைப் பற்றி மட்டுமே இவர்கள் எழுதுகிறார்கள். ஏலையாவில் வெளியாகும் ஆக்கங்களை எழுதும் ஆக்கதாரர்கள் இலக்கியச் சந்திப்பில் பங்குபற்றுவதில்லை" — வேலாயுதம்

"நமது குரல் 15ஆவது இதழில் வெளியான தண்டனை என்ற சிறுகதையில் கணவனை மனைவி மாடியிலிருந்து தள்ளிவிழுத்திக் கொலை செய்வதாக முடிவு சொல்லப்பட்டுள்ளது. இது பிற்போக்குத்தனமான முடிவாகும். இக் கதாசிரியரின் எல்லாக் கதைகளிலும் பிரச்சினைக்குரியவர்கள் செத்துவிட்டால் தீர்வு கிடைத்துவிடும் என்பதாகவே காட்டப்படுகிறது" — ராஜினி, உமா.

"புதுமை இலக்கம் இரண்டில் சோசலிசம் வந்தால் மாத்திரம் பெண்ணடிமை அகன்றுவிடுமா? என ரஞ்சனி எழுதியிருக்கிறார். பெண்களும் சமுதாய மாற்றத்திலும், பொருளாதார உற்பத்தியிலும் பங்கெடுப்பதன் மூலமேபெண்விடுதலைக்காகப் போராட முடியும். மார்க்சிச, லெனினிச பாட்டாளி வர்க்கக் கட்சியில்தான் ஆண், பெண், பேதத்தைக் காணமுடியாது" — அரியராசா

www.tamilarangam.net



"ஏலேயா 15ஆவது இதழில் பெண்விடுதலை பற்றி மூன்றாவது இலக்கியச் சந்திப்பில் புதுமை ஆசிரியர்கள் குழப்பமாகப் பேசி பரபரப்பை ஏற்படுத்தினார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.புதுமை ஆசிரியர்கள் சரியான கருத்துகளைத்தான் சொல்லியிருந்தார்கள்.ஏலேயா ஆசிரியர் குழுவைச் சேர்ந்த முருகதாசன்தான் பெண்களுக்கு நகைகளில்தான் ஆசை என்பதுபோலக் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.பெண் விடுதலை என்பது வீட்டுக்குள்தான் என்பது போல அவர் தனது கட்டுரையில் எழுதியுள்ளார்."—உமா

"பங்குனி மாத சிந்தனை இதழில் பெண்கள் ஆண்களுக்கெதிராகப் போராடக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.பெண்கள் முதலில் ஆண்களோடு போராடித்தான் அமைப்பாக வேண்டியிருக்கிறது.வைகாசிமாத தேனி இதழில் பெண்களைப் பற்றிய கட்டுரைகளில் திருமணமாகாத பெண்கள், விதவைகளைப் பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை."— மங்கையற்கரசி

"சிந்தனை சஞ்சிகையில் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வரும் நேரத்தில் கொல்வின் ஆர் டி சில்வா மறைந்துவிட்டார் என்று எழுதப்பட்டுள்ளது.சிறிமாவின் ஆட்சியில் தமிழ் மொழிக்கு பாதுகாப்பாயிருந்த 29வது சரத்தை நீக்கும்போதே கொல்வின் ஆர் டி சில்வா மறைந்து விட்டார். இப்படிப்பட்டவருக்கு சிந்தனை அஞ்சலி செய்கிறது" — இந்திரன்

"நமது குரல் 16ஆவது இதழில் வெளியான தாலியா,வேலியா என்ற விக்னபாக்கியநாதனின் கட்டுரை குழப்பமாகவும்,பிற்போக்காகவும் உள்ளது.தனது ஆக்கங்களுக்கான விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல்தான் அவர் கடந்த இலக்கியச் சந்திப்பிலும்,இந்த சந்திப்பிலும் கலந்து கொள்ளாமல் நொண்டிச் சாட்டுகளைச் சொல்லித் தப்பிக் கொள்கிறார்.முதலிரண்டு இதழ்களிலும் நல்ல விடயங்களைத் தந்த புதுமை மூன்றாவது இதழில் கேள்வி,பதில் என்று விளையாட்டுத்தனமான விடயங்களைப் புகுத்தி தரத்தைக் குறைத்துள்ளது.மற்றைய இயக்கங்களைக் கண்டிக்கும் வெகுஜனம் சஞ்சிகை ஈ.பி.ஆர்.எல்.எவ்வினால் செய்யப்படும் கொலைகளையோ ஏனையவற்றையோ சுட்டிக் காட்டவில்லை" — செல்வராஜா

"தூண்டில் 17ஆவது இதழில் வெளியான சிவத்தின் ஈரமான பாறைகள் என்ற கவிதை தரமாக உள்ளது.இக் கவிதையில் எங்கள் பூமியை விற்றா ஏனடா போர்க் கப்பல்கள் வாங்குகிறீர்கள் என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன.தொழிலாளர்களுக்கென்று எந்த நாடும் இல்லை.இந்த வரிகளால் கவிதையின் தரம் குறைக்கப்படுகிறது" — சந்துஉ.நீ.

"தனிநபரைப் புகழ்ந்து பேசி சமூக முன்னேற்றத்தை வளர்க்க முடியாது.நாங்கள் மலையகப் போராட்டத்தை மழுங்கடித்த குற்றத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும்" — பத்மமனோகரன்

www.tamilarangam.net



"புதுமை இலக்கம் இரண்டில் குர்க்கா, பஞ்சாப் சிறுபான்மை இனம் இலங்கையில் இன்னொரு சிறுபான்மை இனத்தின் போராட்டத்தை நசுக்கப்பயன்படுத்தப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ளது. இப்படி எழுதி இவர்கள் பிரச்சினையைத் திசை திருப்புகிறார்கள்" — சுதன்

"இப்போது வரும் அநேகமான கதைகள் சமுதாயத்தில் வெகு அருமையாக, நடக்கின்ற பிரச்சினைகளைத்தான் கொண்டிருக்கின்றன. புகைத்தல் உடல் நலத்திற்கு கெடுதி என்று சிகரெட் பெட்டிகளில் எழுதியிருப்பது போல் இனிமேல் சில கதைகளைப் படித்தால் கெடுதல் என்று எழுதவேண்டும் போல் தெரிகிறது." — சிவராஜா

"புதுமை இலக்கம் மூன்று வாசிக்க வேண்டும் என்ற தன்மையை ஏற்படுத்துகிறது. கேள்வி, பதில் நன்றாக உள்ளது. அதிகமான பத்திரிகைகள் கேள்வி பதிலை தாங்களே தயாரித்துக் கொள்கின்றன." — குமாரசாமி

"இங்கு வெளிவரும் சஞ்சிகைகளை நோக்கும்போது கவலையாயுள்ளது. சமுதாயத்தை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டிய சஞ்சிகைகள் பின்னோக்கி இழுத்துக் கொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளை ஆய்வு செய்து நிரந்தரமான, உண்மையான தீர்வைத் தேருவதுதான் இலக்கியம். கலை என்பது கலைக்காக அல்லாமல் மக்களுக்காக இருக்க வேண்டும். இன்றும் கூட மக்களுக்காக—பாட்டாளிகளுக்காக—கலைகள் இல்லை. வெறும் தனிநபர் முரண்பாடுகளாகவே இருக்கின்றன" — கலைச்செல்வன்

"இலக்கியச் சந்திப்பு ஒவ்வொரு முறையும் வெறும் விவாதத்துடனேயே முடிவுறுவது பிரயோசனமற்றது. எனவே ஒரு செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும்" — சிறீரங்கன்

காரசாரமாக நடைபெற்ற வாசகர் விமர்சனங்கள், கருத்துப் பரிமாறல்களின் பின் வழமைபோல் பெண்விடுதலை பற்றியும் குரல்கள் எழுப்பப்பட்டன. "பெண்களுக்கென தனி இயக்கம் வேண்டும்", "பிரதான எதிரிக்கெதிரான போராட்டத்திற்குத்தான் ஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டும்", "ஆண்கள் தான் பெண்களின் பிரதான எதிரி எனக் கருதுவது தவறு", "பெண்ணடிமையால் ஆண்களும் பாதிக்கப்படுகிறார்கள்", "பெண்ணடிமையில் பெண்களும் பங்கு வகிக்கிறார்கள்", "ஆண், பெண் என இரண்டு பிரிவாகப் போராடுவது போராட்டத்தை நசுக்கவே வழிசெய்யும்", "ரஷ்யாவில்கூட முழுமையான பெண் விடுதலை இல்லை" போன்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

மேற்கு ஜேர்மனியில் தமிழர்களால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கல்விச் சேவை இலங்கையின் முதலாளித்துவக் கல்வி

www.tamilarangam.net



யையே இங்கேயும் பிள்ளைகளுக்குத் திணிக்கிறது என்று சிறிரங்கன் தெரிவித்தார்.

தங்களுக்கான விமர்சனங்களுக்கு சஞ்சிகையின் ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள் பதலளிக்கையில் "இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்கிறோம். ஏனெனில் அது மக்கள் மூச்சுவிட சந்தர்ப்பத்தையளிக்கிறது" என சிந்தனை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த வாசுதேவா கூறினர். "இந்த மூச்சுவிடும் சந்தர்ப்பமே புரட்சியை மழுங்கடிக்கும் காரணியாக இருக்கிறது" என்று தூண்டில் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சிவசோதி தெரிவித்தார். "எழுத்துப் பிழைகளாலேயே கருத்துப் பிழை வந்துவிடுகிறது. அனைத்து வாசகர்களையும் கவர்வதற்காகவே கேள்வி, பதில் பகுதியை ஆரம்பித்தோம். இந்தப் பகுதியை படிப்பவர்கள் மற்றப் பகுதிகளையும் படிப்பார்கள்" என்று புதுமை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பாரதிதாசன் ராகவன் ஆகியோர் கூறினர்கள். "வாசகர்களைக் கவர்வதற்காக எழுதக்கூடாது. உண்மையான வாசகர்கள் சரியான விடயங்களை தாங்களாகவே தேடி வாசிப்பார்கள். எனவே கவர்வது போன்ற மூன்றுந்தரமான பகுதிகள் தேவையில்லை" என கலைச் செல்வன் தெரிவித்தார். "எனக்கு ஆண்கள் மேலிருக்கும் வெறுப்பையும், ஆத்திரத்தையுமே எனது கதைகளில்ஆண்களைக் கொலை செய்வது மூலம் தீர்த்துக் கொண்டேன். இனிமேல் இப்படியான முடிவுகளை கதைகளில் எழுத மாட்டேன்" என தண்டனை என்ற சிறுகதையை எழுதிய நிருபா தெரிவித்தார். "எனக்கும் இப்படி ஆண்கள் மேல் ஆத்திரம் இருக்கிறது. நிருபா கதைகளில் சிலரைத்தான் கொன்றுர். நானென்றால் பலபேரைக் கொன்றிருப்பேன்" என நமது குரல் ஆசிரியர் தேவிகா கூறினர்..

இதனையடுத்து சமூக மாற்றத்திற்கான எழுத்தாளர்களின் பங்கு என்ற கருத்தரங்கு நடைபெற்றது. ப.குமாரசாமி, பார்த்திபன், ஆகியோரின் கட்டுரைகள் பற்றிய கருத்துகளுடன் கருத்தரங்கு ஆரம்பித்தது. பார்த்திபனின் கட்டுரை பிரச்சார இலக்கியத்தையே பிரதிநிதிப்படுத்துவதாகத் தெரிவித்த கலைச் செல்வன் "மேற்குநாடுகளில் இருந்து கொண்டு இலங்கையின் சமூக மாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்ய முடியாது. யாருக்காக எழுதுகிறோம் என்பதில் தெளிவிருக்க வேண்டும். மேற்குநாடுகளில் அகதிகளாக இருப்பவர்கள் மத்தியதர வர்க்க,குட்டி முதலாளிகளே. இவர்களுக்காக எழுதி புரட்சியை ஏற்படுத்திவிட முடியாது. ஆகவே மேற்கு நாடுகளில் இருப்பவர்கள் செய்யக் கூடியது இங்கிருக்கும் முற்போக்காளர்களையும், புத்திஜீவிகளையும் ஒன்றிணைப்பதுதான்." என்ற கருத்தை விபரித்தார். "இங்கே எழுதுபவர்கள் எல்லோரும் சுயவிளம்பரத்திற்காகவே எழுதுகிறார்கள்" என்று ஸினிலோகன் கூறினர்.

www.tamilarangam.net



கருத்தரங்கின் பின் நூல் விமர்சனம் இடம் பெற்றது. விக்கு பாக்கியநாதனின் 'கவிதைச் சோலை' என்ற கவிதைத் தொகுப்பும் இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தாலும் பலர் தெரிவித்த கருத்துகளின் பின் விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. "தனது கவிதைத் தொகுப்பு விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை முன்பே அறிந்திருந்தும் இலக்கியச் சந்திப்புக்கு அவர் வரவில்லை'. எனவே கவிதைச்சோலையை விமர்சிக்க வேண்டாம்", "200 வருடங்களுக்கு முன்பிருக்க வேண்டியவர் இப்போதிருந்து கவிதைசைச் சோலையை எழுதியிருக்கிறார்", "பல்கலைக்கழகத்திற்குள் சிலவேளைகளில்தான் அறிவாளிகள் போவதுண்டு" போன்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. எனவே பார்த்திபனின் 'ஆண்கள் விற்பனைக்கு' நாவல் மட்டும் விமர்சிக்கப்பட்டது.

"இந்தச் சமுதாயத்தில் பெண்களாலும் தனித்து வாழ முடியும் என்பதை வேதா, பத்மா பாத்திரங்கள் நிரூபிக்கின்றன. பெண் விடுதலை என்றெல்லாம் பேசி, எழுதிவிட்டு தங்களுடைய சொந்த வாழ்வில் தலைகீழாகவாழ்பவர்களை தவபாலன் பாத்திரம் சித்தரிக்கிறது. கதையில் பல சொற்பிழைகள் உள்ளன. கதையில்வரும் தவபாலன் பாத்திரம்போல் எழுத்தில் மட்டும் நில்லாது கதாசிரியர் சொந்த வாழ்விலும் எழுதியதைப்போல் வாழ்ந்து காட்ட வேண்டும்" — நிருபா

"நாவலில் வரும் கனகசுந்தரம் என்ற பாத்திரம் திணிக்கப்பட்ட பாத்திரமாகவே உள்ளது. இவர் மேல் பரிதாபமேற்பட வேண்டுமென்பதற்காக அன்னபூரணம் கொடுமைக்காரியாக சித்தரிக்கப்பட்டுள்ளாள். இதேவேளை வீட்டு வேலைகளையெல்லாம் பெண்கள்தான் செய்ய வேண்டும் என்பது போலவும் காட்டப்பட்டுள்ளது. ஆணாதிக்கத்தை வெளிக்காட்டும் பல சம்பவங்கள் கதையில் வருவதால் பாரதி என்ற பாத்திரம் பார்த்திபன்போல்தான் தெரிகிறது" — ரஞ்சனி

"வழக்கமான சீதனக் கதைகளில் படித்த பெண்களோ, பட்டதாரிப்பெண்களோதான் வருவார்கள். ஆனால் இந்த நாவலில் தொழிலாளப் பெண்ணை முக்கிய பாத்திரமாகக் காட்டியுள்ளது. சீதனத்தால் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் பாதிக்கப்படுகிறார்கள், பெண்கள் தங்களைத் தாங்களே சீதனத்தைக் கொடுத்து விலைபேச வேண்டுமா என்ற நல்ல கருத்துகள் சொல்லப்பட்டுள்ளன. நாவலில் குறிப்பிட்டுள்ளது போல் மதில்களும், வேலிகளும் பாதைகளையல்ல, காணிகளைத்தான் பாதுகாக்கின்றன" — உமா

"நிரஞ்சன் என்ற பாத்திரத்தைப் பார்த்திபன் தானாக நினைத்தாரோ தெரியவில்லை, நாவல் முழுவதும் அவர் ஆண்களை இழிவாகவே பார்த்துள்ளார். பல இடங்களில் தமிழ் பிழைபிழையாக எழுதப்பட்டுள்ளது" — இந்திரன்

www.tamilarangam.net



"பார்த்திபனின் வித்தியாசப்படும் வித்தியாசங்கள், ஆண்கள் விற்பனைக்கு என்ற இரண்டு நாவல்களுமே சமாந்தரமான பிரச்சினைகளைத்தான்கொண்டிருக்கின்றன. சீதனப் பிரச்சினை மத்திய தர வர்க்கத்திலேயே இருக்கிறது. அடிமட்டத்தில் இருப்பவர்களிடம் இல்லை. நாவலில் சரியான தீர்வு சொல்லப்படவில்லை. நாவலின் ஓரிடத்தில் ஆம்பிளையள் பொறுக்கியள் என்ற வசனம் வருகிறது. இது தேவைதானா? இன்னோரிடத்தில் பணக்காரர்களுக்கும் ஏதோ கஷ்டம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தநாவலில் வரும் (தவபாலன்) கதாபாத்திரம் தேவையற்ற கதாபாத்திரமாக உள்ளது. பணக்காரர்களிடம் குவிந்துள்ள பணம் பணமில்லாதவர்களிடம் போய்ச்சேருகின்றது என்ற வகையில் சீதனம் வாங்குவதை நான் ஆதரிக்கிறேன்" - ஸீனிலோகன்

"நாவலின் முடிவு அவசரப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. கதையில் ஆண்பாத்திரங்களான தவபாலனும், நிரஞ்சனும் திருமணம் செய்துவிட்டார்கள். ஆனால் பத்மாவும், உமாவும் யாராவது தங்களை மணமுடிக்க வரலாம் என்றுகூறுவது அவர்கள் ஏக்கமாக இருப்பதுபோல் சித்தரிக்கிறது" - செல்வராஜா

"நாவலின் பின் அட்டையில் அடுத்த வெளியீடு அம்மா பாவம் என்றுபோட்டிருப்பது வியாபாரத் தன்மைபோல் தெரிகிறது" - சுதன்

"பார்த்திபனின் கதைகளில் நல்ல நகைச்சுவையும் இருப்பதைக் குறிப்பிட வேண்டும்" - சிவராஜா

நூல் விமர்சனத்தையடுத்து, சிறந்த கட்டுரை, கவிதை, சிறுகதைகளுக்கான பரிசளிப்பு இடம்பெற்றது. கொலண்டில் உள்ள இலக்கிய ஆர்வலர்கள் நடுவர்களாக இருந்து இவற்றைத் தேர்ந்தெடுத்திருந்தனர்.

புதுமை இலக்கம் ஒன்றில் வெளியான 'கலப்ஜா நகர்' என்ற கவிதைக்காக ராகவனுக்கும், தூண்டில் கலம் 12இல் வெளியான 'காணமற் போனவர்கள் பற்றிய அறிவிப்பு' என்ற கவிதைக்காக ரத்திக்கும், தூண்டில் கலம் 15இல் வெளியான 'அவர்கள்' என்ற கவிதைக்காக காங்கேசன் கோவிந்குமாருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

கட்டுரைத் தேர்வுகளின்படி தூண்டில் கலம் 13இல்வெளியான 'மாக்சிசம் சமூக விஞ்ஞானம்' என்ற கட்டுரைக்காக பிடலுக்கும், தூண்டில் கலம் 11இல் வெளியான 'சமூக மாற்றமென்பது மனமாற்றமா?' என்ற கட்டுரைக்காக உமாவுக்கும், தேனி ..தை இதழில் வெளியான 'ஈழப் போராட்டம் ஒரு நோக்கு' என்ற கட்டுரைக்காக ஆதவனுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறுகதைத் தேர்வுகளின்படி ஏலையா இதழ்15இல் வெளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யான 'மாற்றம் எப்போது?' என்ற சிறுகதைக்காக டானியலுக்கும், சிந்தனை கார்த்திகை இதழில் வெளியான 'ஒரு அம்மாவும் அரசியலும்' என்ற சிறுகதைக்காகவும், தேனி பங்குனி இதழில் வெளியான 'மனைவி இறக்குமதி' என்ற சிறுகதைக்காகவும் பார்த்திபனுக்கும் பரிசுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. "ஆக்கதாரர்களுக்கான ஊக்கம்தான் இந்தப் பரிசளிப்பின் நோக்கம் என்று பரசளிப்பை வரவேற்பவர்கள் கருதுவார்களாயின் அதை நான் அவமதிக்கவில்லை. என்னுடைய எழுத்து சமூக மாற்றத்திற்கான பங்களிப்பைச் செய்கிறதோ இல்லையோ, என்னுடைய எழுத்துகளைப் பரிசுகளால் மதிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை" என்று கூறி பார்த்திபன் பரிசை வாங்க மறுத்துவிட்டார்.

"இது பெறுமதியான சன்மானமல்ல, எமது அன்பின் வெளிப்பாடே" என்று குமாரசாமியும், "இலக்கியச் சந்திப்பின் செயற்குழுவில் இருந்தவர் பரிசளிப்பு நிகழ்ச்சி இருக்கிறதென்று தெரிந்தும் முற்கூட்டியே இக் கருத்தைத் தெரிவிக்காமல் இப்போது பரிசை வாங்க மறுப்பது தவறு" என்று வேலாயுதமும், "இந்தக் கருத்து இந்தச் சந்திப்பின்போதான கருத்துப் பரிமாறல்களின்போதும் வந்திருக்கலாம். எனினும் பார்த்திபன் பரிசை வாங்காவிட்டால் இதுவரை பரிசு வாங்கியவர்களையும் கொச்சைப்படுத்துவதாகும்" என்று ஜனிலோகனும் கூறியும் பரிசு வாங்கப்படவில்லை. இலக்கியச் சந்திப்புக்கு வந்திராத ரத்தி, டேல் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பரிசை அவர்கள் சார்பில் பெற்றுக்கொண்ட சிவசோதி "பரிசளிப்பு பற்றிய பார்த்திபனின் கருத்துத்தான் டானியலின் கருத்தும். பரிசுக்குரியவர்களின் கருத்தையறியாமல் அவர்களின் பரிசை நிராகரிக்க முடியாததால் இந்தப் பரிசை வாங்கி அவர்களுக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் இதை மறுத்து திருப்பியனுப்பினால் மறுபடி இலக்கியச் சந்திப்புக் குழுவிடம் பரிசுகளை ஒப்படைப்போம்" என்று கூறினார்.

நன்றியுரையுடன் நான்காவது இலக்கியச் சந்திப்பு முடிவடைந்தது. அடுத்த இலக்கியச் சந்திப்பை செப்ரெம்பர் மாத இறுதிபகுதியில் பிராங்போர்ட் நகரில் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இதுவரை நடைபெற்ற இலக்கியச் சந்திப்புகளைவிட நான்காவது இலக்கியச் சந்திப்பில் முன்னேற்றம் தென்பட்டது. இதே போல் வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்தும், சரியான ஒழுங்குமுறையிலும், அவசியமான நிகழ்ச்சிகளைச் சேர்த்தும் ஐந்தாவது இலக்கியச் சந்திப்புநடைபெற வேண்டுமென்பது பலரின் எதிர்பார்ப்பு.

www.tamilarangam.net



(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் தலையங்கம் உண்மைகளைச் சுட்டிக் காட்டுவதால் கொஞ்சம் கசப்பாகவிருந்தாலும் நியாயமாகத் தெரிகிறது. ஆனால் எத்தனைபேரின் காதுகளில் விழும் என்பதுதான் கேள்விக்குறி. பல பத்திரிகைகள் மறைமுகமாகத் தாக்கி வாசகர்களைக் குழப்பும் வேளையில் தூண்டில் துணிந்து உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

நூறன்பேர்க் ப. வி. சிறிரங்கன்

சிவத்தின் 'திறந்த புத்தகம்' என்ற கவிதையில் 'நாம் முதலில் படிக்க ....' என்று தொடங்கும் கடைசி இரண்டு பந்திகளும் மேலதிகமாகச் சேர்க்கப்படாதிருந்திருந்தால் அக் கவிதையின் உயிர்வாழ் காலம் நீண்டதாக இருந்திருக்கும்.

சுவிஸ் ராசேந்திரன்



சீனாவில் இன்று

இக் கட்டுரை சீனாவில் இன்றுள்ள பிரச்சினைகள் பற்றிய முடிவான தீர்மானங்களைக் கொண்டதல்ல. கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் ஆய்வுக் கட்டுரையே. எனினும் கட்டுரையாளர் குறிப்பிட்டது போல் அரச ஒடுக்குமுறையாளர்களுக்கெதிராக மாணவர்கள் நடத்திய போராட்டத்தை சீன அரசு காட்டுமிராண்டித்தனமாக ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று நசுக்கிய பயங்கரவாதம் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இலக்கியச் சந்திப்பு

நான்காவது இலக்கியச் சந்திப்புச் செயற்குழுவில் பார்த்திபன் ஒரு அங்கத்தவராக இருந்தும் கூட பரிசளிப்பு பற்றிய தனது கருத்தை செயற்குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்கு முற்கூட்டியே தெரிவிக்காதது தவறே

www.tamilarangam.net



யாயினும் அன்றைய இலக்கியச் சந்திப்பின் போதே அவரது கருத்து முழுமையாக உறுதியடைந்ததென்பதே உண்மையாகும். இறுதி நேரத்தில் பரிசை வாங்க மறுத்து பார்த்திபன் தனது கருத்தை வெளியிட்டதால் பலர் இது ஒரு 'கீரோயிசமே' எனக் கருதிக் கொள்ள இடமளிக்கப்பட்டதை மறுப்பதற்கில்லை.

ஒரு படைப்பாளிக்குத் தேவைப்படுவது சமூகத்தில் அவரது படைப்புகள் உண்டாக்கும் பாதிப்பும், அவற்றைப் பற்றிய விமர்சனங்களாகவும் இருக்க முடியுமே தவிர 'பரிசு'களாக அல்ல. பரிசளிப்புகளால் பரிசை ஒருமுறைபெற்றுக் கொண்டவர் பின்னர் பரிசுக்காகவே எழுதத் திசை திருப்பப்படுவதும், புதிதாக எழுத ஆரம்பிப்பவர்கள் பரிசையே நோக்கமாகக் கொள்வதும் கண்கூடு. இதனால் சமூக மாற்றத்திற்கான தமது பங்களிப்பிலிருந்து ஆக்கதாரர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். இந்தப் பாதிப்புகளை மறுத்து 'அன்பு', ஊக்குவிப்பு' என பரிசளிப்பை நியாயப்படுத்துவது கூட சமூக மாற்றத்திற்கு குந்தகத்தையே விளைவிக்கும்.

## வாழ்க்கை இலக்கியம்

விருதுகள் கிடைக்காது
விரக்தியுற்றுப் போனவர்களே!


படைப்புகளின்
அமரத்துவத்தைத் தவிர
வேறு எந்த உயர் விருதுகளும்
உங்களை
கௌரவப்படுத்தி விடாது.

இதனை உணராத வரை
வாழ்க்கை இலக்கியம்
தலையெழுத்தை நொந்தபடி
கையெழுத்துப் பிரதியாகவே
இருக்கும்.

கௌதமன்

www.tamilarangam.net





# ஞானைவ மிதித்த உலகு

– பார்த்திபன்

விசாலம் இருமிக் கொண்டிருந்தாள். தொண்டை கமற, சத்தம் பயங்கரமாக இருந்தது. அவளுடைய முழுச் சக்தியுமே இருமுவதற்கு பாவிக்கப்படுவது போல.

மீரா அடுப்படியில் கொத்தமல்லி காய்ச்சிக் கொண்டிருந்தாள். அம்மா இருமும் சத்தம் கேட்கும் ஒவ்வொரு தடவையும் அவளது நெஞ்சைப் பிசைந்தது. 'பாவம் அம்மா, நல்லா வயக்கெட்டுப்போனா. நோய், நொடியென்று அடுத்தடுத்து வந்து படுக்க வைக்குது' என்று பரிதாபம் வந்தது.

இரவு ஏற்னெவே வந்திருந்தது. பரவலாகக் கறுப்பாயிருந்தன. காசுள்ளவர்கள் வீட்டில் மின் விளக்குள் ஒளிர, தெரு விளக்குள் வழமையான சோகையாயிருந்தன.

அன்றைய நாள் இன்னும் முடிந்துவிடாத நிலையில், வீட்டை விட்டுப் போயிருந்தவர்களுக்காக வீட்டிலிருப்பவர்கள் பயங்களுடன் காத்திருந்தார்கள். பல இளைஞர்கள் கட்டாய நல்ல பிள்ளைகளாய் வீட்டில் அடங்கியிருந்தனர். நாளை எப்படியோ என்று பலர் முற்கூட்டியே ஏக்கப்படலானார்கள்.

கொத்தமல்லி நீரை வடிகட்டி மூலம் தகரக் குவளைக்குள் இறக்கி, சீனியை மிகையில்லாமல் சேர்த்து, நகச்சூட்டிற்கு ஆற்றி எடுத்துக்கொண்டு அம்மாவிடம் வந்தாள் மீரா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்னைப் படர்ந்திருந்த தலையணையில் தலை பதித்து, தாறுமாறாகப் பரவியிருந்த பாயில் விசாலம் கிடந்தாள். தலை மாட்டிற்கு அருகாமையில் சளியைப் போடுவதற்காக மண் சிரட்டை வைக்கப்பட்டிருந்தது.

"அம்மா, மல்லித்தண்ணி போட்டிருக்கிறன். எழும்பிக் குடியுங்கோ" என்றாள் மீரா. அம்மாவை அந்தக் கோலத்தில் பார்க்கையில் மறுபடி துக்கம் ஏற்பட்டது. 'இந்த வயதிலயும் என்ன மாதிரி ஓடியாடிவேலை செய்த அம்மா இப்ப இப்பிடி.... '

விசாலம் சுரத்தில்லாமல் எழுந்து உட்கார்ந்தாள். " நீ சாப்பிட்டியே மோனை? வெள்ளனப் படேன். விடிய வேலைக்கெல்லேபோகவேணும்? " என்றாள்.

இன்னும் அதே பரிவு, பாசம். இருமல், தடிமனோ, வயது முதிர்வோ இந்தப் பாசத்தை எந்த விதத்திலும் அசைக்கவில்லை. உடம்புதான் தோற்றுப் போயிருந்தது.

"நான் ஆறுதலாய் சாப்பிடுறன். நீங்க சூடாறுதக்கு முந்திக் குடியுங்கோ" மீரா குவளையை எடுத்துத் தாயின் கையில் கொடுத்தாள்.

குடிக்க வாயருகே கொண்டுபோன விசாலம் பின்னர் குவளையைக் கீழே வைத்தாள். "வரவர நிலைமையள் மோசமாய் வருகுது. நீ நாளக்கி வேலைக்குப் போக வேணுமே? நீ போனாப் பிறகு எனக்கெண்டா ஒரே நெஞ்சிடிதான்"

தொண்ணூற்றொன்பது தரத்திற்கு மேல் கேட்டாலும், விசாலம் இப்போதும் அலுக்காமல் கேட்டாள். வழக்கமான கேள்விதானேயென்று மீராவுக்கும் எரிச்சலும் வரவில்லை. அம்மாவை அவளுக்கு நன்றாகத்தெரியும். புரிஞ்சுகொள்ள இயலும்.

"வீட்ட இருந்தா மட்டும் பிரச்சினை வராதே? ஆமிக்காறன் நாளைக்கும் வீட்ட உள்ளிடலாம். அல்லாட்டி துவக்கு வைச்சிருக்கிறவேற ஒருத்தனும் வரலாம். இதெல்லாம் சொல்லிக்கொண்டு நடக்கிற அலுவலே? பிரச்சினை எப்பவும், எங்கயிருந்தும் வரலாம். அதுக்குப் பயந்து வீட்டுக்குள்ள இருக்கிறதெண்டா சீவிக்கேலுமே? நீங்க முதல் உதைக் குடியுங்கோ"

விசாலம் உடனே குடித்துவிடவில்லை. மகளை நன்றாகப் பார்த்தாள். கண்கள் ஏதேதோ குறிப்புகள் எடுத்துக் கொண்டன. 'என்ன மாதிரி வளந்திட்டாள். நான் அவளை வளத்தது முடிஞ்சு அவள் இப்பஎன்னைக் கவனிக்கிறாள். இன்னும் எத்தினை நாளைக்கு என்றை இருந்துமாரடிக்கப் போறாள்? கலியாண வயசும் வருகுது. நானும் பாயோட கிடந்தா

www.tamilarangam.net



உந்த விசயங்களை ஆர் கவனிக்கிறது? எந்த உதவியும் இல்லாம இருக்கே' என்று இயலாமையில் விசாலத்திற்கு கண்ணீர் வந்தது.

அம்மா எதை நினைத்துக் கவலைப்படுகிறாள் என்று மீனாவால் ஊகிக்க முடிந்தது. "இந்த முதலாளித்துவ சமுதாயம். இதில மனுசத்திற்கு எந்த மதிப்புமே இல்லை. பொருளுக்குத்தான் முக்கியத்துவம். சமனில்லாத முறையில இருக்கிற சொத்துகளை சமனாய் ஆக்கேக்கதான் அதுக்கு இருக்கிற பக்தி போய் மனுசருக்கிடையில் அன்பும், பாசமும் வரும். அனபடியா எங்களுக்குதவ ஆக்களில்லையே எண்டு கவலைப்படுறதில அர்த்தமில்லை. எங்களைவிடக் கீழான நிலையில, சாப்பாட்டுக்கு எச்சில் தொட்டியைக் கிளறிக்கொண்டு சன சனம் இருக்குது" என்று வேண்டுமானால் லதாவுடன் கதைக்கலாம். அம்மாவுக்குப் புரியுமா?

"இப்ப என்னத்துக்கு யோசிக்கிறியள்? எங்களுக்கு ஆற்றை உதவியும் தேவையில்லை. எங்கட சீவியத்துக்கு நான் ஏதோ முடிஞ்சதை உழைக்கிறன். ஆக மிஞ்சிறு யேமனியில இருக்கிற தம்பி பாத்துக் கொள்ளு வன்தானே?" என்று மேலுக்குச் சொல்லி வைத்தாள். அம்மாவைச் சமாதானப்படுத்துவதற்கு எதையும் சொல்லாம். உண்மையில் மீனா தம்பியிடம் பொருள் சம்பந்தமான எந்த எதிர்பார்ப்பையும் வைக்கவில்லை. அப்படியான ஒரு விருப்பம் அவளுக்கு இப்போதில்லை.

விசாலம் இன்னும் குடிக்கவில்லை. மகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். "தம்பி கடைசியா என்ன எழுதியிருந்தவன்?" விசாலத்திற்கு இப்போது ஞாபக மறதியும் அதிகரித்திருந்தது.

"பொறுங்கோ வாச்சுக் காட்டுறன்" என்று மீனா அம்மா தலை வைத்திருந்த தலையணையின் கீழிருந்து கசங்கியிருந்த நீலக் கடிதமொன்றை எடுத்துப் படித்தாள்.

"தான் நல்ல சுகமாம். இன்னும் வேல கிடைக்குமாப்போல இல்லையாம். தனக்குத் தாற சமூக உதவிக் காசில மிச்சம் பிடிச்சு இந்தமாசக் கடைசியில ஆயிரம் மார்க் அனுப்புறாம். எங்களைக் கவனமாயிருக்கட்டாம்" என்று சுருக்கத்தைச் சொல்லி முடித்தாள்.

"அவனுக்கும் எங்களில அக்கறை இன்னும் குறையேல. பாவம் அவன். வேல கிடைக்காட்டி என்ன செய்யிறது? தான் சாப்பிடாமத்தான் எங்களுக்கு காசனுப்பிறான் போல. என்ரை பிள்ளைக்கு ஆசையா வாய்க்குருசியா சமைச்சுக் கூடிப் போடேலாத தூரத்தில அவன் இருக்கிறான்" விசாலத்தின் பாசம் இப்போது மகன் மேலும் திசை திரும்பியிருந்தது.

www.tamilarangam.net



"அப்படியில்லை" என்று சொல்ல நினைத்தும் மீரு பேசாமலிருந்தாள். அங்கேயிருப்பவர்கள் மூன்று வேளையும் வயிறாரச் சாப்பிட்டு, குடித்து திடமாய் இருப்பதுடன், தியேட்டர்களில் தமிழ்ப்படங்கள் பார்ப்பதிலிருந்து, நகை நட்டுகளைப் பூட்டிக்கொண்டு கோலகலாமாக கலியாண வீடுகள் வைப்பதுவரை நண்பர்களுக்கு வரும் கடிதங்களிலிருந்து அவள் அறிந்திருந்தாள். தற்போதைய குழப்பமான பிரச்சினைகளில், அநேகமானவர்கள் எதிரியாகப் போன நிலையில் வெளியேற்றங்களை அவள் பாரிய துரோகங்களாகக் கருதவில்லை. எனினும் வெளியேறிப் போனவர்களின் இடாம்பீக வாழ்நிலைதான் அவளுக்கு வெறுப்பைத் தந்தது.

"நல்லாய் ஆறிப் போச்சு. குடியுங்கோவன்" என்று அம்மாவுக்கு மீண்டும் மல்லித்தண்ணியை ஞாபகப்படுத்தினாள்.

விசாலம் இப்போது குடித்தாள். மிடறு விழுங்கி முடித்தபின் குவளையை வைக்க, மீரு அதை எடுத்துக்கொண்டு "உப்பிடியே படுங்கோ" என்று சொல்லிவிட்டு அடுப்படிக்கு வந்தாள்.

அவசரச் சமையலில் எல்லாம் தாறுமாறாய் பரவியிருந்தன. கழுவ வேண்டியவற்றைக் கழுவியபின், எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவைத்தாள். அடுத்தநாள் வாங்க வேண்டிய பொருட்களை கணக்குப் பார்த்து வைத்துக் கொண்டாள். இரவுச் சாப்பாட்டுக்கென ஏற்கெனவே றொட்டி சுட்டிருந்தாள். சம்பல்போட அலுப்பாயிருந்தது. விடியக் காலையில்வேலைக்குப் போவதற்கு முன் அம்மாவுக்காகச் சமைத்து வைத்திருந்த குழம்புக்கறியில் கொஞ்சம் சட்டியுடன் ஒட்டியிருந்தது. அது போதும் சமாளிக்க எனத் திருப்திப்பட்டுக் கொண்டாள்.

அடுப்படியிலிருந்து அறைக்கு வந்து, காசுப் பேணியைத் திறந்து இருப்பை எண்ணிப் பார்த்தாள். மாதக் கடைசிவரைக்கும் சிரமம் போலவே தெரிந்தது. அப்போதுதான் அம்மாவுக்கு மருந்து வாங்கவேண்டுமென்ற ஞாபகமும் வந்தது. சமாளிக்க வேண்டுமாயின் முழு நாளும் வேலைக்குப் போயே ஆக வேண்டும் —குண்டு வெடித்தாலும் சரி, ஆமிக்காறன் செக் பண்ணினாலும் சரி.

'வேலைக்குப் போய் வாற எங்களுக்கே இப்பிடிச் சீவிக்கிறதுக்கு கணக்குப் பாக்க வேண்டியிருந்தா தொழிலெண்டு நிரந்தரமா எதுவும் இல்லாதவை எப்பிடிச் சீவிப்பினம்? வருத்தம் வந்தா மருந்தென்னெண்டு வாங்குவினம்?' என்று யோசித்துப் பார்த்ததில் எப்படியான கொடூர சமூக அமைப்புக்குள் வாழுகிறோம் என்று மீருவுக்குப் புரிந்தது.

(இன்னும் வரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஜூலை 1989 இலம் : 19

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி .............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

6 மாதங்கள் – 20 டி.எம்.
1 வருடம் – 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் – 25 டி.எம்.
1 வருடம் – 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகள்

ந.சுசீந்திரன்

சிலதுகள் இறந்தொழிந்தன
இவைகள்
தப்ப வைக்கப்பட்டன.

காப்பாற்றியவர்களிடம்
பட்ட கடன்
உபகாரம் - அது தீர்க்க
நன்றியினால், அன்றி
நன்றி கெட்டதினால் இன்று
இவை மெல்ல
மரணிக்கும்.



FLÜCHTLINGE

Manche starben
diese
Wurden gerettet
und sterben nun langsam
an der Dankesschuld
gegen die Retter
an ihrer Dankbarkeit
oder
an ihrer Undankbarkeit

* Erich Fried